உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

—o—

# திருப்பேரூர்க்
# கிள்ளைவிடுதூது.

இஃது,

கோயமுத்தூர் வித்துவான்

ம-ா-ா-ஸ்ரீ,

கந்தசாமிமுதலியாரவர்களால்

இயற்றப்பட்டு,

சைவசமயத்தவர்களின்பொருட்டு

சென்னை:

ஸ்ரீரஞ்சநி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சுபாநு [illegible] கார்த்திகைமீ.

# விடயசூசிகை.

—o—


| பக்கம். | விடயம். | கண்ணிகள். | |
|---|---|---|---|
| | | முதல். | வரை. |
| க | கிள்ளையின் சிறப்பு ... ... ... | க | ௩௯ |
| ச | சரித்திரத்தின் முற்பகுதி ... ... | ச0 | எ0 |
| [illegible] | பேரூரடைந்தது ... ... ... | எக | எடு |
| [illegible] | [illegible]லைவன் சிறப்பும், தசாங்கமும் ... | எசு | க0ச |
| [illegible] | தலைவன் பவனி ... ... ... | க0டு | க௩எ |
| [illegible] | ஆசிரியரைக் கண்ணுற்றது ... ... | க௩அ | கசடு |
| [illegible] | ஆசிரியரோடு செய்த ஏசுமத சம்பாஷணம் ... ... ... ... | கசசு | ச௩அ |
| [illegible] | சைவப்பற்றுற்றது ... ... ... | ச௩௯ | சடுடு |
| [illegible] | ஆசிரியர் பேரூர்த்தலமான்மிய முணர்த்திப் பிராயச்சித்தம் விதித்தது ... | சடுசு | டுகச |
| சச | ஆசிரியர் பிரிவு ... ... ... | டுகடு | டுஉஉ |
| சடு | ஆலயஞ்சென்று தரிசித்தது ... ... | டுஉ௩ | டுஎ௩ |
| ச௯ | சரித்திரத்தின் பிற்பகுதி ... ... | டுஎச | டுஅ௩ |
| டு0 | இப்பிரபந்தஞ்செய்தற்குக் காரணம் ... | டுஅச | டு௯0 |
| டு0 | கிள்ளையைத் தூது செலப் பிரார்த்தித்தல் ... ... ... ... | டு௯க | சூ0[illegible] |

சிவமயம்.

—o—

# திருப்பேரூர்
# கிள்ளைவிடு தூது.

## காப்பு.

### வெண்பா.

பிள்ளைமதிமுடியெம் பேரூர்ப்பெருமான்மேற்
கிள்ளைவிடுதூது கிளத்தவே—யொள்ளியபூங்
காவிரியக்கும்பமுனி கைக்கரகநீர்கவிழ்த்துக்
காவிரியைத்தந்தவன்ருள் காப்பு.

### கலிவெண்பா.

மாமேவுசெங்கமல மாதரசும்வெண்கமலப்
பூமேவுபாமகளாம் பூவையரு—மாமதுர (க)

வாக்கியத்தாற்போற்றி மலர்க்கரங்கடாஞ்செய்த
பாக்கியத்தானுய பயனெய்தப்—பூக்கொய்து (உ)

தூவச்சிவந்துபரஞ் சோதிதிருமேனியொடு
மேவச்சிவந்தசத்தி மெய்யொளிபோற்—பாவலர்கண் (ந)

மெச்சியுவமைபகர் மேனியெல்லாமழகாய்ப்
பச்சைப்பசுத்தசெழும் பைங்கிளியே—யிச்சையாற் (ச)

சத்திகொடுசமைத்த தம்பிரான்மேனிநிற
மொத்திலகுஞ்செவ்வா யொளிர்குருகே—நித்தநித்த (ரு)

மத்தனவனெவ்வுயிரு மாட்டுவோனம்பலத்திற்
றத்தெயெனவாடுமெனுந் தத்தையே—மித்தைப்ர (சு)

பஞ்சமென்றுமுக்கட் பசுபதியின்பாதமொன்றே
யஞ்சுகமென்றேமொழியு மஞ்சுகமே—மிஞ்சசுரர் (எ)

கண்ணைப்பிசைந்து கலங்காமன்முன்னமிந்த
மண்ணையுண்டோன்மேனி வருந்தாமல்—விண்ணவர்கள் (அ)

வாடிமயங்காமன் மங்கலியப்பிச்சையென்று
தேடிமலர்மாதர் தியங்காம—னீடுருவ (கூ)

வாசுகியும்பாற்கடலு மந்தரமுந்தங்களுக்கு
நாசமுற்றதென்று நடுங்காமற்—பேசரிய (க0)

வாற்றல்படைத்த வரக்கரையுமங்கவர்பாற்
சீற்றமிகவுடைய தேவரையும்—வேற்றறவே (கக)

சேர்த்தியிடவந்துதித்த தேவாமிர்தம்போல
வார்த்தைசொலவல்ல மரகதமே—கூர்த்தவிழித் (கஉ)

தோழியரைநோக்கியென்றுந் தோற்றமொடுக்கமிலா
வூழிமுதல்வனு மொருத்தன்முன்—கீழாகச் (கங)

செத்துப்பிறந்துழலுந் தேவரையுமூலமென்று
சித்திரமேபேசுதலைச் சீர்தூக்கி—யுய்த்துணர்ந்து (கச)

தக்கதனைத்தேராது தர்க்கமிடுவோர்மதிபா
ரக்கக்காவென்னு மவந்திகையே—பொற்கனகப் (கரு)

பஞ்சரத்தில்வாழும் பசுங்குதலாய்நின்றனக்குக்
கிஞ்சுகமென்னும்பெயருங் கேட்டிலார்—நெஞ்சின் (கசு)

மகிழ்ந்துமலைமாது மருங்கினினைவைத்துப்
புகழ்ந்துமொழிகேட்கின்ற பொற்பு—நெகிழ்ந்தமல (கஎ)

ரைங்கோலானின்னுடைய வாதரவுவாய்த்தமையாற்
செங்கோனடாத்துந் திறமுமுன—மெங்கோனை (கஅ)

யாதரவாலர்ச்சித் ததனுற்சுகவனத்து
நாதரெனப்பூதலஞ்சொ னன்னலமே—யாதியவாம் (கக)

வல்லமையுமோரார்நின் வார்த்தையினுல்யாவர்மனக்
கல்லுங்கரையுங் கருத்தறியார்—வெல்லரிய (உ0)

விக்கிரமாதித்தனெனும் வேந்தனையோர்தட்டான்செய்
யக்கிரமந்தீர்த்த தறிகிலார்—துக்கம் (உக)

தணவுதவயோகியர்க டம்மைப்போனிற்கிங்
குணவுகனிகாய்தளிரென் றுன்னுர்—மணவணிக (உஉ)

ளேயுமுனைப்பைங்கிளியே யென்றுபலகண்ணிசொன்ன
தாயுமானுர்தங் தமிழுணரார்—நேயத் (உங)

திருப்புகழ்ப்பாவாணருன்போற் சென்றடைந்துசோணப்
பொருப்புறுதல்கேட்டும் பொருந்தார்—விருப்பில் (உச)

சுகருந்தன்ருல்குலத்திற் ருேன்றியதான்ஞான
திகரானவண்ணந் தெளியார்—பகருமறை (உரு)

வாதவூராளிதிரு வாசகத்தேபத்தங்க
மோதவுனைச்சொன்ன துணர்கிலார்—தூதுவிட்டோர் (உசு)

தங்காரியமெல்லாந் தப்பாதுட்கொண்டதையுன்
றன்காரியமாய்த் தலைக்கொண்டு—முன்குறிப்பிற் (உஎ)

காலமிடமறிந்து காரியத்தைமுற்றுவித்துக்
கோலமுடனெய்துங் குறிப்பறியார்—போலிகளாம் (உஅ)

வெள்ளைமதியோரறிவின் மிக்கவுனைத்தங்கள்சிறு
பிள்ளைமதிகொண்டுகிளிப் பிள்ளையென்பர்—கிள்ளையே (உகு)

வீரர்களின்மேலான வீரரெனத்தேவர்புகழ்
சூரர்களைமாளத் தொலைத்தானைச்—சீரரவம் (ங0)

பூண்டானுக்குங்குருவைப் பொற்கொடியாரோரிருவர்க்
காண்டகையாய்மாலேயிட்ட வான்பிளேயை—வேண்டுகின்ற (௩௧)

கோலமெலாங்கொள்ளுங் குறிஞ்சிக்கிழவனேயோர்
பாலனெனவோதுகின்ற பண்புகாண்—பாலின் (௩௨)

சுவையைப்பழித்தமொழி சொல்லுதலானின்னேச்
சுவையுடையகீரமெனச் சொல்வ—ரவையகத்துத் (௩௩)

தூதுசுகமாகச் சொல்லுதலினுற்சுகமென்
ருேதுமுலக முனேவியந்து—தீதறியாப் (௩௪)

பிள்ளேமழலேயையும் பெண்களிளமொழியுங்
கிள்ளேமொழியாமென்று கேட்டிடுவர்—வள்ளுவனுர் (௩௫)

குழலினிதியாழினி தென்பர்தம்மக்கண்
மழலேச்சொற்கேளா தவரென்—றழகுபெறச் (௩௬)

சொன்னதுவுநின்சொற் சுவையறிந்தேயல்லவோ
வுன்னேவிடத்தூதுக் குரியார்யார்—தன்னேரி (௩௭)

லன்பையுடையா யறிவுடையாயாய்ந்திடுஞ்சொல்
வன்மையுடையாய் மகிதலத்தி—லின்னபுக (௩௮)

ழெய்தியுயர்வா மிளங்கிளியேயெந்தனது
செய்திசிலவெடுத்துச் செப்பக்கேள்—வையத்துள் (௩௯)

வீசுபுகழ்சேர் வியன்பதியென்றிவ்வுலகம்
பேசுகருவூரிற் பிறந்தேன்யான்—மூசுதிறை (௪0)

வெள்ளப்புனன்மே வியசீர்க்கங்காகுலத்திற்
பிள்ளேயெனவந்து பிறந்தேன்யான்—வள்ளல்பேர் (௪௧)

பூணுலகநாதன் பொருந்தவரும்பார்ப்பதிபாற்
பேணுமகவாகப் பிறந்தேன்யான்—பூணற் (௪௨)

கரியபுகழ்சே ரரங்கசாமிக்குப்
பிரியமருகாய்ப் பிறந்தேன்யா—னுரியபல (சங)

சீரிட்டநாளினலஞ் சேர்கந்தசாமியென்று
பேரிட்டழைக்கப் பிறந்தேன்யான்—வாரிட்ட (சச)

நற்றொட்டிலேற்றி நலம்பலபாராட்டியெனைப்
பெற்றவர்கள்போற்றப் பிறந்தேன்யா—னுற்ற (சரு)

களங்கமுளவெல்லாங் காசினியிற்றோன்றி
வளர்வதேபோல வளர்ந்தே—னிளமையிலே (சசு)

தந்தையிறந்தொழியத் தாயார்பிறந்தகத்தில்
வந்துவளர்க்க வளர்ந்தேன்யான்—செந்தமிழு (சஎ)

மல்லாமலிங்கா ளரசுபுரியாங்கிலியர்
சொல்லதுவுங்கற்கத் தொடங்கினேன்—கல்லூரிக் (சஅ)

கோர்பெயராம்பள்ளிக் குயர்வில்சிறுசாதிப்
பேர்காரணமாய்ப் பெறும்வண்ணஞ்—சேருமொரு (சக)

பள்ளியிடைப்புக்கந்தப் பள்ளிச்சிறூர்களுட
னுள்ளிருந்துபாடங்க ளோதினே—னெள்ளுமந்த (ரு0)

வன்னியபாடைக்கிணங்க வன்னியமார்க்கச்சிறப்பு
மன்னியர்பாற்கற்றே யமர்ந்தேன்யா—னன்னோர் (ருக)

மருட்டுவழியான் மதிமயங்கியந்தக்
குருட்டுவழியென்னுளத்துட் கொண்டே—னிருட்டின்கட் (ருஉ)

கண்டகயிறரவாய்க் காணுதல்போலாங்கவர்கள்
விண்டபொருள்யாவு மெய்யாயுட்—கொண்டதனற் (ருங)

றெய்வச்சிறப்புஞ் சிவனடியார்தஞ்சிறப்புஞ்
சைவச்சிறப்புந் தரிக்கிலேன்—பொய்யார் (ருச)

புலைத்திரளின்சேர்க்கையாற் புத்திவரத்தக்க
கலைத்திரளையேதொன்றுங் கல்லேன்—கொலைத்திரள்சேர் (௫௫)

விவிலியநூற்கொள்கை மிகுத்தலாலன்றோர்
நவிலியனூலொன்று நவிலே—னவமாகக் (௫௬)

காலங்கழித்தேன் கழித்தேன்குலவொழுக்கஞ்
சீலங்கழித்தே திரிதந்தேன்—ஞாலமுடன் (௫௭)

காசுபணத்திற்குங் கண்மயக்கும்வேசைகட்கு
மேசுமதத்திற்கு மிச்சைவைத்தேன்—சீசியென (௫௮)

நல்லாரைக்கண்டா னடுங்குவேனல்லார்க
ளெல்லாரைக்கண்டா லகங்களிப்பேன்—பொல்லாத (௫௯)

துன்மார்க்கமென்றாற் சுகித்திடுவேன்சுத்தசைவ
சன்மார்க்கமென்றாற் சலித்திடுவே—னென்மார்க்கங் (௬௦)

குற்றமுளதேனுங் குலத்திலபிமானத்தான்
முற்றத்துறந்து முடிந்ததிலைச்—சிற்றறிவா (௬௧)

லேசுமதம்பெரிதென் றிச்சைவைத்தேனானாலுந்
தேசுவிடுத்ததிலே சேர்ந்ததிலைப்—பேசிடுதே (௬௨)

லெல்லாமதன்முடிவே யென்றாலுந்தீயேனப்
பொல்லாச்சமயம் புகுதவிலைக்—கொல்லும் (௬௩)

புலியானதுபசுத்தோல் போர்த்தவிதமென்னப்
பொலிவார்திருநீறும் பூண்பேன்—குலவொழுக்க (௬௪)

மில்லாதபெண்டி ரிருமனம்போலென்னகமு
மல்லாப்புறமும்வே றாயிருந்தேன்—வல்லார் (௬௫)

சிலையிலெழுத்தாய்ச் சிறுவயதிற்கல்வி
நிலையுறுதல்பொய்யோ நிலத்தின்—மலதேகப் (௬௬)

பன்றிமலமருந்தப் பார்த்திருந்தநல்லாவின்
கன்றுமலமருந்தக் காணுமோ— துன்றும் (சுஎ)

பழக்கத்தினாலே பலிக்குமுலக
வழக்கத்தையார்தடுக்க வல்லார்—சழக்கார் (சுஅ)

மனக்கிசைந்தவாறெல்லாஞ் செய்யென்னும்வார்த்தை
யெனக்கிசைந்ததூலா யிராதோ—வினக்கேடாய்ச் (சுகூ)

சின்னஞ்சிறுவயதிற் சிற்றினத்தைச்சேர்ந்ததனா
லன்னார்தமதுருவ மாயினேன்—முன்னாளி (எ0)

லென்னதவஞ்செய்தேனோ வேதுகலனோவறியேன்
பின்னர்வரச்சென்றடுத்தேன் பேருரை—யென்னொடொரு (எக)

மித்துவரும்வீணாதி வீணரொடும்பேய்மோகப்
பித்தரொடுஞ்சென்றடுத்தேன் பேருரைச்—சித்தத் (எஉ)

தரியபொருள்பேணாமே யாயிழையார்ப்பேணும்
பிரியமுடன்சென்றடுத்தேன் பேருரை—வரியவனா (எகூ)

யாறறியாவந்தகனுக் கங்கையிடைப்பொக்கிஷஞ்சேர்
பேறதெனவடைந்தேன் பேருரைக்—கூறரிய (எச)

பன்னாளவமாகப் பாழுக்கிறைத்தல்விட்டுப்
பின்னாளிற்சேர்ந்தேன்யான் பேருரை—யந்நா (எரு)

டிருநாளாயெங்கோன் றெருவிற்பவனி
வருநாளாய்நேர்ந்த வகையா—லருவுருவச் (எசு)

சோதியான்மூன்றுச் சுயம்புவான்செஞ்சடையிற்
பாதிமதிசூடும் பரமன்—மாதினையோர் (எஎ)

கூறுடையானெட்டுக் குணமுடையான்பால்வெள்ளை
நீறுடையான்கையி னெருப்புடையா—னறுடைய (எஅ)

சென்னியாறுடைய சென்னியான்றன்னை
முன்னமளித்த முதல்வன்—பன்னகத்தின் (எகூ)

பூணுடையானோரிந்தப் பூமிமுழுதுஞ்சுமந்த
நாணுடையான்முப்புரிசேர் நாணுடையான்—காணுமவர்க் (அ0)

கஞ்சக்கரத்தா னருள்பெறுவோருச்சரிக்கு
மஞ்சக்கரத்தா னரியகருப்—பஞ்சிலையா (அக)

லையம்பெய்யுங்கரத்தா னங்கமழலூட்டினா
னையம்பெய்யுங்கரத்த னாதியான்—பொய்யாத (அஉ)

கக்கிரியையோர்விலாக் கண்டகர்சாகக்கன
கக்கிரியையோர்விலாக் கைக்கொண்டான்—மிக்கடியோ (அங)

முக்கண்ணாநல்லமிர்த மொப்பாவான்முச்சுடரு
முக்கண்ணாய்வாழு முகமுடையான்—றக்கார் (அச)

மறந்தும்பிறவி வரநினையான்றானும்
மறந்தும்பிறவி யிடைவாரான்—றுறந்தோர் (அரு)

தவந்திரண்டதென்னத் தவளநிறம்வாய்ந்து
நிவந்துலகமூடுருவி நின்று—நவந்தரும்பல் (அசு)

விம்மிதங்களோங்கி விமலமாய்வேதத்தின்
சம்மதமாம்வெள்ளித் தடவரையுந்—தம்மதருட் (அஎ)

சத்தியுறையுந் தடங்கிரியுஞ்சங்கேந்தும்
புத்தேளயன்வாழ் பொருப்பிரண்டு—நத்திக் (அஅ)

கருதமலைவில்லாமற் கந்தனருள்செய்யு
மருதமலையென்னு மலையு—மொருபடித்தாய்ப் (அகூ)

பஞ்சப்பிரமமே பஞ்சவரையானதென
மஞ்சடரும்பஞ்ச வரையுடையா—னெஞ்சாது (கூ0)

நீர்த்தரங்கத்தாலே நெருங்குமகன்கரையைப்
பேர்த்தெறிந்துவெள்ளப் பெருக்காகி—யார்த்தெழுந்தே (கூக)

யங்காட்பகீரதற்கா யாங்கிழிந்தகங்கையைப்போ
லிங்காட்பலவுலக மீடேறப்—பொன்னூற் (கூஉ)

பொலிந்தரசிதப் பொருப்பிலுலாவி
மலிந்தபொருள்பற்பலவும் வாரிக்—கலந்து (கூங)

தொடும்பொருளையெல்லாஞ் சுவர்னமயமாக்கி
விடும்பரிசாற்காரணப்பேர் மேவிக்—கடும்பவரோ (கூச)

யாவுமகற்றி யறம்பொருளின்பாக்கியலை
வாவிவருங்காஞ்சி மாநதியான்—மேவுபுக (கூரு)

ழேட்டிலடங்காம லெவ்வுலகுந்தன்மணமே
நாட்டுவிக்குங்கொங்குவள நாட்டினன்—போட்டிவிளைத் (கூசு)

தாரூரெல்லாஞ்சின்ன வூராய்ப்புறங்கொடுக்கப்
பேரூரெனத்திகழ்பே ரூரினு—னூரூரர் (கூஎ)

பாமாலைசூடும் பணைத்தோளிலென்றன்புன்
பாமாலைசூட்டப் பணித்ததுபோற்—பூமாலை (கூஅ)

நேசமாய்மாசகன்ற நின்மலமாய்ப்பொன்மயமாய்
வாசமார்கொன்றைமலர் மாலையான்—வாசிக் (கூகூ)

கடும்பரியிலேறுவோ ரல்லாதார்காணப்
படும்பரிசொன்றில்லாப் பரியா—னிடும்பச் (க00)

சிலையின்பொருட்டுவெள்ளைச் சிந்துரமுநல்குங்
கொலைவல்லகம்பமத குஞ்சரத்தா—னலையாம (க0க)

லீண்டுமடியவர்கட் கெய்தும்பேரின்பமென
மூண்டுமுழங்கு முரசத்தா—னுண்டவன்றன் (க0உ)

சேவேறுசேவடியை யல்லதிலேயென்றசையுங்
கோவேறுகொற்றக் கொடியினுன்—பூவேறு (க0௩)

மந்தணனுநாரணனு மண்டபகிரண்டமொடு
வந்தடங்குமாணே வலியுடையான்—மைந்தர்களாம் (க0௪)

பட்டிவிநாயகனும் பன்னிருகைப்பண்ணவனுங்
கிட்டியருகே கிளர்ந்துவரத்—தொட்டரனு (க0௫)

ருண்டபரிகலமு மொண்மலரும்பெற்றவெங்கள்
சண்டிப்பெருமானுஞ் சார்ந்துவர—மண்டியபே (க0௬)

ரன்பாற்றமிழ்பாடு மப்பருடன்சம்பந்தர்
வன்பாலடிமைகொண்ட வன்ருெண்டர்—தென்பார் (க0௭)

விளங்கவரும்வாதவூர் வேந்தரிவரெல்லாந்
துளங்காதுபக்கலிலே சூழ—வுளந்தனிலே (க0௮)

யிச்சையறிந்துலக மெல்லாம்படியளக்கும்
பச்சைவல்லித்தாயாரும் பாங்கர்வர—வச்சுதனே (க0௯)

டிந்திரனேயாதி யிமையோர்குழாந்திரண்டே
யந்தரத்தின்கண்ணே யலர்தூவத்—துந்துமியே (கக0)

யாதிமுழவ மதிரமுழங்கியெழ
வீதிநிரம்ப விருதடையக்—கோதில் (ககக)

குணவடியாரெல்லாங் குழாங்கொண்டுகூடிப்
பணிவிடைகள்வேண்டியவா பண்ண—வணிகிளரும் (ககஉ)

வேதமொருபாலும் விமலத்தமிழ்வேத
நாதமொருபாலு நவின்றிலங்கச்—சீதப் (கக௩)

பனிவெண்மதியங்கள் பார்க்கவந்ததென்னக்
கனிவெண்குடைகள் கவிப்ப—நனிவிரைந்து (கக௪)

கங்கைத்திரளும்வந்த காட்சியெனமேலோங்கித்
துங்கக்கவரிபுடை துள்ளவே—யெங்குமா (ககரு)

மூவர்பெருமான் முடியாமுதற்பெருமான்
றேவர்பெருமான் சிவபெருமான்—காவலராஞ் (ககசு)

சிட்டிப்பெருமான் றிதிப்பெருமான்காண்பரிய
பட்டிப்பெருமான் பவனிவந்தான்—சிட்டரெலா (ககஎ)

மாடுவார் தித்தித் தமுதமெனக்கானவிசை
பாடுவார்நின் று பரவுவார்—நாடுவார் (ககஅ)

கண்ணேகருத்தே கதியேவான்கற்பகமே
யெண்ணேயெழுத்தே யெனத்துதிப்பார்—நண்ணுப் (ககக)

பதிதரெனினும் பவனிபார்க்கக்கிடைத்தாற்
கதிதருங்காணென்றே களிப்பார்—துதிசெய்யும் (க௨0)

விண்ணேருமண்ணேரும் வேட்டதுன துகடைக்
கண்ணேயளித்தருளுங் காணென்பார்—விண்ணவர்க்காய் ()

கல்லைக்குழைவித்த கண்ணுதலேயெம்மனமாங்
கல்லைக்குழைத்தல் கடனென்பா—ரல்லைப் (க௨௨)

பொருவுமிடற்றிலெங்கள் புன்மலமுஞ்சேர்த்தா
விருமைக்கருப்பாகுமென்பார்—திரு நுதலிற் (க௨௩)

நீவைத்ததெங்கள்பெருந் தீவினையெல்லாமொருங்கே
வேவித்தற்கேயோ விளம்பென்பார்—சேவித்தோர் (க௨௪)

தங்கண்மலம்போக்கவோ தண்புனலைச்சென்னிவைத்தாய்
திங்களையும்வைத்ததென்ன சேர்த்தென்பா—ரெங்கள்பொருட் ()

டாயோர்நரவுருவு மானுய்க்குவெங்கொடிய
பேயோடுமோடலென்ன பெற்றியென்பார்—தீயபவக் (க௨சு)

காடெறியவேயோ கணிச்சியினைக்கைக்கொண்டாய்
மாடாயொருமானேன் வைத்ததென்பார்—பீடாரும் (கஉஎ)

யோகத்திருந்து முமையாளைச்செம்பாதி
பாகத்தில்வைத்ததென்ன பற்றியென்பா—ராகத்திற் (கஉஅ)

கந்தபொடிபூசக் கருதாமல்வெண்ணிறமாய்
வெந்தபொடிபூசலென்ன விந்தையென்பா—ரிந்தவகை (கஉகூ)

தத்தமனக்கிசைந்த சாற்றித்தொழுதுநிற்ப
வெத்தனையோபேர்சூழ்ந் திரங்கிநிற்பப்—பித்தனேன் (கங0)

கொஞ்சமுமுள்ளத்திலன்பு கொண்டதிலைக்கல்லான
நெஞ்சமுருகநைந்து நின்றதிலைத்—தஞ்சமெனக் (கஙக)

கண்ணருவிபாயவிலை கைதலைமேற்கொள்ளவிலை
மண்ணதனில்வீழ்ந்து வணங்கவிலைத்—துண்ணெனவென் ()

ஞகம்புளக மரும்பவிலையவ்விழவின்
மோகமொருசற்று முயங்கவிலை—வேகப் (கஙங)

பறவைவிலங்கோட்டிப் பயமுறுத்தநாட்டி
நிறுவுமொருபுல்லுருவை நேர்ந்தேன்—வெறுமையே (கஙச)

ஞஞலுமங்கா ளடியரடிப்பொடியென்
மேஞன்செய்புண்ய விசேடத்தாற்—ருஞகப் (கஙரு)

பட்டங்கிரசம் பரிசனவேதிப்பரிசப்
பட்டதனுற்பொன்னும் பரிசேபோல்—விட்டகன்றுங் (கஙசு)

குற்றியெனநிற்குங் குறிபார்த்தெனக்கருளும்
பெற்றிநினைந்து பெருங்கருணை—யுற்றகரு (கஙஎ)

ஞகரனேயென்பொருட்டோ ராசிரியனுய்ச்சந்த்ர
சேகரனென்ருேர்திருப்பேர் சேர்த்தியே—சாகரஞ்சூ (கஙஅ)

ழிவ்வுலகிலுள்ளமத மெத்தனையோவத்தனைக்கும்
பௌவமெனும்வேதப் பயோததியைத்—திவ்யாக (௧௩௯)

மத்தின்வழியே மதித்தநவநீதசைவ
சித்தாந்தமெய்யுணர்த்துந் தேசிகனாய்க்—கத்துகின்ற (௧௪0)

கற்பனாமார்க்கமெனுங் கட்செவிக்குவல்லிடிபோற்
சொற்பிரயோகஞ்செய் சுகோதயனாய்ப்—பொற்பார் (௧௪௧)

மதமாவைமாக்கள் வசமாக்கமற்றோர்
மதமாவைக்கொண்டே மடக்கும்—விதமவனென் (௧௪௨)

போலோர்மனிதவுருப் பூண்டுஞ்சிவசின்னத்
தாலேபிரானாந் தகைவிளங்க—வாலடியி (௧௪௩)

லன்றமர்ந்தவாபோ லரசமரத்தருகே
நின்றெளியேன்காணநேர் நின்றருளி—யென்றன்னை (௧௪௪)

யன்பொடழைத்தங் கருகிருத்திப்பற்பலவா
முன்பழமைபேசி முடித்ததற்பி—னென்பேரில் (௧௪௫)

வைத்தபெருத்ததயா வாலென்முகநோக்கி
வித்தகனேயெங்கோன் விழவினிலுன்—மத்தனென (௧௪௬)

நின்றாயென்னேயுன்ற னெஞ்சமிரும்போகல்லோ
வொன்றாலுருகா வொருபொருளோ—சென்றோடிப் (௧௪௭)

பார்க்குங்கண்ணோவியன்செய் பாவையின்கண்ணோவோசை
சேர்க்குஞ்செவியிரும்பிற் செய்செவியோ—பார்க்குங்கா (௧௪௮)

னல்லகுடிப்பிறந்தாய் நாடிளமையோடழகும்
புல்லும்வடிவம் பொருந்தினாய்—கல்லுங் (௧௪௯)

கரையுமெம்மான்செல்பவனி கண்டுங்கரையா
துறையும்பெருமமதை யுற்றாய்—முறையே (௧௫0)

வழிவழியாய்ச்சைவத்து வந்தமைக்குன்முன்னோர்
மொழிபெயரேசான்று மொழிய—வழுவிநீ (௧௫௧)

பேயின்கோட்பட்டாயோ பேதமையோவேற்றவர்தம்
வாயின்சோட்புற்ற வகைதானோ—வாயவிதஞ் (௧௫௨)

சொல்லென்றான்காட்டினில்வாழ் துட்டவிலங்கனையேன்
சொல்லன்றுசொல்லத் தொடங்கினேன்—கல்லாத (௧௫௩)

மாந்தரெனவென்னை மதித்தனிரோவிந்தப்பார்
வேந்தரெனக்கொண்டாடி மெச்சிடுங்காற்—போந்தெனைநீர் ()

கல்லுக்குமண்ணுக்குங் காசடிக்குஞ்செம்புக்கு
மெல்லவணங்க விலையென்று—சொல்லுதரு (௧௫௫)

னன்னத்தைப்பார்த்தொருகொக் கானதுவான்மேற்பொய்கை
யின்னத்தைமீனாதி யில்லையெனச்—சொன்னத்தை (௧௫௬)

யொப்பாகுநீவி ருயர்ச்சியெனுஞ்சைவமோ
தப்பாகுமேசுச் சமயமொன்றே—யிப்பாரை (௧௫௭)

நீதிமிகவோதி நிலைநிறுத்தலாலதுவே
யாதியெனலாமென் றறைந்தேன்யா—னோதியவை (௧௫௮)

கேட்டும்பொறுத்துக் கிருபையாயென்மீது
மீட்டுமருட்கடைக்கண் வீட்சணிய—நாட்டி (௧௫௯)

யழகழகுன்செய்கை யழகழகுன்கல்வி
யழகழகுன்சொற்பிறந்த வாற்ற—லழகாருஞ் (௧௬௦)

சைவத்தைப்போலாஞ் சமயமொன்றுஞ்சங்கரனாந்
தெய்வத்தைப்போலான தெய்வமொன்றும்—வையத்தி (௧௬௧)

லாதித்தன்போலா யனைத்திருளையுந்துறக்குஞ்
சோதித்தனியாஞ் சுடரொன்றும்—பூதலம்போ (௧௬௨)

லேற்றுநாஞ்செய்கின்ற வெப்பிழையையும்பொறுத்துப்
போற்றியுணவளிக்கப் பூமியொன்றும்—பாற்றுளிபோற் (கசுரு)

சூற்கொண்டுலகிற்குத் தோற்றுந் துணையாக
மேற்கொண்டுபெய்தளிக்க மேகமொன்று—மேற்செனவே ()

யில்லையில்லையில்லை யெனவேபறையறைந்து
தொல்லைமறையாவுந் துணிந்துரைக்குந்—தொல்லுயிர்கட் ()

கொன்றுந்தகைய விதிவிலக்கையோதுவித்தே
யென்றுந்திரியா வியல்பினதா—யன்றாலின் (கசுசு)

கீழிருந்தியோகியர்கள் கேட்கவுணர்த்தியதா
யூழிதொறுநிற்கு முறவினதா—யாழியின்க (கசுஎ)

ணறனைத்துஞ்சென்றுபுகு மாறுபலசமயப்
பேறனைத்தும்வந்தொடுங்கும் பெற்றியதாய்ச்—சூறுமுயிர்ப் ()

பக்குவத்திற்கேற்பவருள் பாலிக்கவல்லதாய்
மிக்குயர்சோபான விதானமுட—னெக்கவே (கசுகூ)

யெல்லாவிலக்கணமு மெல்லாமகத்துவமு
மெல்லாநலமு மியைந்துளதாய்க்—கொல்லா (கஎ0)

விரதமுடையதாய் வேதாந்தமோன
சரதமெனுமோலி தரித்தே—கரதலத்தி (கஎக)

லாமலகம்போல வருட்சத்திப்பேறளித்துக்
காமக்குரோதங் களைவதாய்—நேம (கஎஉ)

நிலையுள்ளதாய்முன்பின் னேர்ந்தமலைவற்ற
கலையுள்ளதாய்ஞானக் கண்ணாய்—மலையே (கஎங)

யிலக்காயடைந்தோர்கட் கெய்தற்குரித்தாய்க்
கலக்காதவின்பக் கலப்பாய்—மலக்கன்மம் (கஎச)

வீட்டித்திரும்பிவரா வீட்டிலருளின்முழுக்
காட்டுவிக்கத்தக்க வருமருந்தாய்—நாட்டிலே (கஎரு)

சாதுசமயமொன்றாய்த் தான்சமைந்தாலுஞ்சமையா
தீதப்பழம்பொருளைச் சேர்த்துவதா—யோதும் (கஎசு)

பதிநிலையும்பாச நிலையும்பசுக்க
ளதுநிலையுந்தப்பா தறைந்தே—யெதுநலமு (கஎஎ)

மோங்கியுயர்வெல்லா முடையசமயஞ்சைவ
மாங்கதனினீவங் தவதரித்து—மீங்கதனை (கஎஅ)

யுள்ளபடியே யுணராதுசான்றோராற்
றள்ளப்படும்புன் சமயமா—யெள்ளுங் (கஎகூ)

கொலைசெய்யக்கற்றுக் கொடுப்பதாய்முன்பின்
மலைவாய்மொழிவிகற்ப மார்க்க—நிலையுளதா (கஅ0)

யிவ்வுலகில்வாழ்வோ ரிடர்ப்பட்டமைத்ததாய்த்
தெவ்வர்களால்வேறுபடச் செய்ததா—யொவ்வாத (கஅக)

சிவபரதத்துவங்கள் செப்புவதாய்ப்புண்ணியமும்
பாவமுமவ்வாறே பகருவதா—யாவரையுஞ் (கஅஉ)

சண்டைக்காளாக்கித் தளஞ்சேர்க்கவல்லதாய்த்
தண்டெடுப்போர்யாவர்க்குந் தாயகமா—யுண்டுடுத்தின் (கஅங)

டெய்துஞ்சுகமேபே ரின்பமெனத்தேற்றியரு
ளெய்துதற்குமுற்று மெதிர்மறையாய்—வெய்தாக (கஅச)

மாசுதிரண்டோருருவாய் வந்ததெனவந்துதித்த
வேசுமதமோமனத்தி லெண்ணினாய்—காசினியில் (கஅரு)

வீட்டிற்பெரிய விளக்கிருக்கமின்மினியைக்
காட்டிற்போய்த்தேடுங் கயவரையு—மீட்டியசெம் (கஅசு)

பொன்னைமடவுட் புகப்பெய்தரிப்பரித்துப்
பின்னைப்பொருளீட்டும் பித்தரையும்—பன்னுசெழுங் (கஅஎ)

தேனிருக்கவுண்ணுமற் செந்தாமரைபடர்ந்த
கானிருந்துலாவுமண்டே கத்தினையு—மானிடர்க (கஅஅ)

ளுன்னத்தகும்பல் லுணவிருக்கவீதியிலே
மண்ணுண்ணும்புத்தியற்ற மைந்தரையு—நுண்ணுணர்வா ()

னூனிரம்பக்கற்றெங்கோ னேன்முருள்பரவாமன்
மானிடரைப்பாடும் பாவாணரையு—மேனி (ககூ0)

கருமையாயூற்றைக் கலக்கிநீருண்ணு
வெருமையையுமொத்தாய்நீ யென்று—னுருவமொன்று (ககூக)

மில்லான்குணமொன்று மில்லான்குறியொன்று
மில்லானிறையென்றே யெம்மனோர்—சொல்லிப்பின் (ககூஉ)

மாறுபடக்கோலம் வகுப்பாரேன்மற்றதற்கு
வேறுகுறிப்பிருக்க வேண்டாமோ—கூறுமவர் (ககூ௩)

சொல்லும்பொருளுணராத் தோடத்தால்மூர்த்திகளைக்
கல்லொடுசெம்பென்றிகழக் கற்றனையால்—நல்லதுபின் (ககூச)

னீயுரைத்தவேசுமத நீணிலத்திலுற்பத்தி
யாயவிதஞ்சற்றே யறையக்கே—ளாயிரத்தை (ககூரு)

நான்மடங்குசெய்யாண்டி னுளிலிந்தப்பூமிமிசை
மேன்முடங்குநாட்டு மிலேச்சர்பலர்—கூன்முடங்கும் (ககூசு)

வெய்யசிருவாண விலங்கொத்துழிதருங்காற்
றெய்வவுணர்ச்சி சிறிதுதிப்ப—நொய்தாகும் (ககூஎ)

**ஏகோவா**வென்றங்கியம்புதுட்டதேவதையை
யேகோபித்தேத்து மியல்புற்றார்—ஏகோவாக் (ககூஅ)

கோபத்துக்கர்யாட்டைக் கொன்றுமாட்டைக்கொன்றுந்
தீபமெடுத்துதிரத் தைத்தெளித்துந்—தூபமிட்டுங் (ககூகூ)

கொண்டாடிச்சாதியாய்க் கூலித்தொழில்செய்து
திண்டாடிவாடித் திரியுநா—ளுண்டான (உ00)

மோசேயத்தேவின் முழுநோக்கடைந்ததாய்
மோசஞ்செய்சூது மொழிக்கிணங்கி—யாசையினு (உ0க)

லாங்கவன்செய்மாய மனைத்தினையுந்தேவனே
நீங்ககலச்செய்ததெனத் தேறியே—தாங்களும்போய்ச் (உ0உ)

சண்டைசெய்துநாடு சயங்கொள்ளுமோருணர்வே
கொண்டதனுற்பண்டைவினை கூட்டியிடச்—சண்டையிலே ()

வெற்றியடைந்தம் மிலேச்சர்க்கதிபதியாய்
மற்றவரைத்தங்கண் மயமாக்கி—யுற்றிடுங்காற் (உ0ச)

பூசாரிமார்க்குப் புகழும்பெருவாழ்வுங்
காசாதிசேருதலுங் காரணமாய்க்—கூசாது (உ0ரு)

கோர்க்கும்விடுகதையின் கொள்கையாய்ப்பல்பொருள்சேர்
தீர்க்கதரிசநங்கள் செப்பியே—பார்க்குள்ளே (உ0சு)

யேழைமதியோர்கடமை யெத்திமதமாய்ச்சேர்த்திப்
பீழைபெருகப் பிழைத்தார்காண்—கோழையா (உ0எ)

யந்தவுரைப்பௌவத்தி லாழாமற்றேற்றியிட
முந்தச்சகுன மொழிவதொத்து—வந்ததிலே (உ0அ)

கள்ளக்குருமார் கணக்கில்லோர்தோன்றியுல
கெள்ளவெளிப்பட் டிறந்ததற்பின்—பிள்ளையெனத் (உ0கூ)

தச்சக்குலத்திலொரு தாய்வயிற்றினுல்வரோடு
முச்சப்படவொருவ னுற்பவித்து—நச்சியே (உக0)

முப்பான்வயது முடியளவுஞ்சுனியங்கற்
றப்பாற்சகப்புரட்ட னுகியே—யிப்பாரி (உகக)

லேசுவெனப்பேர்பூண் டிருக்களவுங்கல்விமணம்
வீசுமிடங்களிலு மேவாது—பேசும் (உகஉ)

வலைஞர்பரதர் மலசர்முதலான
புலைஞருடனுறவு பூண்டு—மலையா (உகங)

திகளில்வசித்தலைந்து மேழைகடம்மாலே
புகழாதிமேன்மை பொருந்தி—மகிதலத்தி (உகச)

லூமைக்குத்திக்குவா யுற்பாதபிண்டமென்று
நாமறியக்கூறு நகுமொழிபோற்—சாமியமாய்க் (உகரு)

காட்டுமெனிதர்கட்குக் கண்கட்டுவித்தைசெய்து
காட்டியவராலே கனம்படைத்து—மேட்டிமையோர் (உகசு)

பொய்யனிவன்செய்யற் புதங்களும்பொய்யென்றுவசை
செய்யமறைந்து திரிதந்து—வையத்திற் (உகஎ)

சஞ்சரிக்குங்காலத்தே தந்தொழிலுக்கானியென்று
வஞ்சவினைப்பூசாரி மார்திரண்டு—நெஞ்சில் (உகஅ)

விரோதத்தினுலவன்றன் மேலேதஞ்சாமித்
துரோகமெனுங்குற்றஞ் சுமத்த—எரோதென்பா (உகக)

னற்புதங்கள்செய்தக்கா லாக்கினைசெய்யாதுயிரைத்
தப்புவிப்பதாய்வாக்குத் தந்திடவு—மப்படிச்செய் (உஉ0)

துய்யாமனெஞ்ச முலர்ந்துபிலாத்தென்பவன்றன்
கையாற்கொலைதீர்ப்புக் கட்டளைபெற்—றையோ (உஉக)

சிலுவைதனிலேயழுது சின்னப்பட்டேறி
வலுவிலுயிர்போக வருந்தித்—தலைவிதியாற் (உஉஉ)

செத்தபின்னரன்னவன்றன் சீடர்சிலரந்தச்ச
வத்தைத்திருடி மறைத்துவிட்டுச்—செத்தோன் (உஉ௩)

கடவுளேயென்றுமிந்தக் காசினியோர்பாவம்
படக்கழுவிற்பட்டிறந்தா னென்றும்—புடவிமிசை (உஉ௪)

மாரியம்மைபேச்சியம்மை மாடன்பொம்மன்மதுரை
வீரனுந்தேவென்னும் விதம்போலு—மூரகத்தே (உஉ௫)

செத்தோர்மேற்பொய்ப்புகழைச் சேர்க்கும்வகைபோலும்
பித்தேறிவாயாற் பிதற்றுங்கா—லொத்துப் (உஉ௬)

பவுலென்னும்பொய்யிற் பயின்றோனொருவன்
கவுலாய்த்தன்பண்டைமதங் கைவிட்—டவலமுள்ள (உஉ௭)

வேசுவின்றன்சீட ரெழுதியதென்றும்மேசு
பேசுசுவிசேட ப்ரசங்கமென்றும்—வாசகங்கள் (உஉ௮)

கூட்டிக்குறைத்தெழுதிக் கொண்டுகுருப்பட்டமுட
னாட்டினிலிவ்வேசுமத நாட்டினன்—கேட்டனையோ (உஉ௯)

வந்தமதமின்னு மனேகவகையாய்ப்பிரிந்த
விந்தையெல்லாஞ்சொன்னால் விரியுங்கா—ணந்தமத (உ௩0)

வாசிரியருந்தெருக்க ளாதியிலேசெய்யுமுப
தேசிகரும்பட்டத்திற் றேர்ந்தவிசு—வாசிகளு (உ௩க)

மெம்மதத்தையும்வீ ணிகழ்ச்சிசெயினும்பொய்யாந்
தம்மதத்தைமெய்யென்று சாதிக்க—வம்மதத்தைத் (உ௩உ)

தாபித்தோன்றாயுதரந் தங்கிமதியம்நிறைந்து
சோபித்தியோனித் துவாரம்வந்துங்—கோபித்துக் (உ௩௩)

கொல்லவருவாரென்று கூசிப்பயந்தொளித்து
மெல்லவருங்காணவழு தேயிறந்தும்—புல்லு (உ௩௪)

முடலகரம்பென் புதிரந்தசைசேர்ந்
திடவிளமையாதி பருவங்க—ளடைவாகக் (உ௩௫)

கொண்டேமனிதகுணங் கொள்கையில்பேதமதா
யுண்டேயுறங்கி யுழன்றவெலாங்—கொண்டேயவ் (உ௩௬)

வேசுமனிதனே யென்பார்வாய்க்குப்பயந்தி
**யோசப்**பெனுங்கருமா னுக்குமணம்—பேசிவைத்த (உ௩௭)

கன்னிவயிற்றிற்றெய்வீ கத்திலுதித்தானென்றுஞ்
சென்னிமிசையாவிவந்து சேர்ந்ததென்றுந்—தன்னுயிர்போய்ச்()

செத்தமூன்றுநாட்டன் சீடர்கள்காணப்பிழைத்து
முத்தியடைந்தானென்று முன்னுரைவந்—தொத்ததென்று ()

மானிடர்தந்தத்துவமும் வானவர்தந்தத்துவமு
மானவிருதத்துவத்தி னுனென்றும்—ஞானியர்கள் (உ௪0)

விண்மீனென்றுலே வெளிப்படக்கண்டாரென்று
மெண்மீறியற்புதம்வந் தெய்துமென்று—முண்மையிலே (உ௪௧)

யில்லாக்கருமமெல்லா மேசுதலைமேற்சுமத்தி
யெல்லாருநம்பு மெனவிசைப்பா—ரல்லாத (உ௪௨)

வேற்றுமதத்துட்குறிப்பாய் மேவுபொருளைத்தமக்குத்
தோற்றுவிதமாய்ப்பொருள்கள் சொல்லியே—தூற்றுவார் ()

மட்டடங்காமோகி மடலூரத்தான்விரும்பப்
பட்டவளைப்போலெழுதும் பாவனையுஞ்—சிட்ட (உ௪௪)

ரரியவொலிவடிவா மக்கரத்தையாருந்
தெரியவரிவடிவிற் றீட்டுதலும்—பொருவவே (உ௪௫)

தம்மனத்துட்கொண்ட தலைவனைத்தந்தியானுதி
செம்மைபெறவோர்வடிவஞ் செய்துளரே—லம்மவவர் (உ௪௬)

நந்தேவின்கண்ணும்மை நோக்குமோகாலாலே
வந்தேநீர்கேட்கும் வரந்தருமோ—வந்தோ (உசஎ)

கதிதருமோசெய்தவனுங் கம்மியனேயன்றே
மதியிலிகாளென்றெமரை வைவார்—பதிதா (உசஅ)

னிணையிலொருவ னெனினுமவனைச்சேர்ந்
தணையுமடியர்பல ராமே—துணையாக (உசகூ)

மன்னவனைச்சேவைசெய்வோர் மந்திரிகளாதியரை
முன்னர்ப்பணியு முறைபோல—வுன்னிப் (உ௫0)

பலவடியார்தம்மைப் பணிந்தாலுமக்குப்
பலதேவரென்றே பழிப்பார்—குலதேவ (உ௫க)

னேகன்றமக்கென்பா ரேகோவாவொன்றுபுருக்
காகவுயிரொன்றேசுக் கத்தனுமொன்—றுகவே (உ௫உ)

தோன்றியவெவ்வேறு சொருபகுணபேதமுள்ள
மூன்றுமதன்மேலு மொழிவார்க—ளூன்றியவவ் (உ௫ந)

வேசுவெகுநீதி யிசைத்தானென்பாரிப்பாற்
பேசுலகுநாகரிகம் பெற்றதென்பா—ரேசுதான் (உ௫ச)

மாதாபோற்றேன்றி வகுத்ததெனுநீதியெலாந்
தீதார்புன்கல்விச் சிறர்களெடுத்—தோதாத்தி (உ௫௫)

சூடியெனும்புத்தகத்திற் சொல்லியுளநீதிகளிற்
கோடியிலோர்கூறெனவுங் கூடுமோ—நாடி (உ௫சு)

விதுகாலமிக்க விழிதொழில்பொய்ச்சான்று
மதுபானநாகரிக மாமோ—பொதுமையறத் (உ௫எ)

தேவனுலகத்தைச் சிருட்டித்தகாரணமும்
பாவம்வந்தவாறுமந்தப் பாவந்தான்—போம்வழியு (உ௫அ)

K. CHIDAMBARANATHA MUDALIAR JAN 1920

மெந்தவகையென்றக்கா லெவ்வுயிருந்தோற்றத்துள்
வந்தவகைசொல்ல வறியாமற்—புந்தியிலாத் (உ௫௯)

தஞ்சிறார்சோறுண்ணத் தாயர்சொல்லுங்கதைபோ
லெஞ்சியுரைவைவி லெனுந்திரட்டுட்—சஞ்சரித்துச் (உ௬0)

சாமியசைவாடச் சலம்வரும்பின்னேயொளியும்
பூமியொடுவானும் பொருத்தவரும்—பூமியைநீ (உ௬க)

தானேபுல்பூண்டாதி தாவென்னச்சாற்றவரும்
வானோரிருசுடரும் வந்துதய—மானதன்முன் (உ௬உ)

னாளுண்டென்றோதவரு நாட்டைத்தனைவணங்க
வாளுன்னிச்சிட்டித்த தாக்கவரு—மூளுமுன்னைச் (உ௬௩)

சென்மமிலைச்சென்மத்திற் சேர்ப்பதற்குச்செய்பழய
கன்மமிலையென்றே களரவரு—நன்மைசெய்ய (உ௬௪)

வாதமெனும்பாலொருபெண் ணாக்கியவனுக்களித்துச்
சாதகஞ்செய்திட்டதெனச் சாற்றவரும்—ஏதனெனுங் (உ௬௫)

தோட்டமொன்றுசெய்தந்தத் தோட்டத்திற்சேவமரங்
காட்டியதிலான கனிபுசித்தாற்—கேட்டினாற் (உ௬௬)

சாவாயென்றோதவருஞ் சர்ப்பமொன்றுசற்பனையாய்
மேவியதையுண்ணும் விருப்பளித்துத்—தேவியினா (உ௬௭)

லுண்ணுவிக்கவல்லதென வோதவருமுண்டவுடன்
கண்ணுடையராய்மானங் காணவருங்—கண்ணாலே (உ௬௮)

நன்மைதின்மையோர்ந்து நரனுமொளிபெற்றுயர்ந்த
தன்மைகண்டுபொங்கிச் சபிக்கவரு—முன்மெலிந்தே (உ௬௯)

யாறுநாளுரை யமைத்துலுப்பதாகியிளைப்
பாறுநாளொன்றென் றறையவரும்—கூறுலகம் (உ௭0)

பீடுபெறன் முன்னமே பெய்துனைத்துளதா
மூடுபனியென்றும் மொழியவரு—நாடிலுயி (உஎக)

ரொன்றிலிருந்துமற் றொன்றுண்டாகிப்பல்கியதா
மென்றெடுத்துக்கூசா தியம்பவருஞ்—சென்றவர்க்கு (உஎஉ)

நித்தியமாஞ்சொர்க்க நிரயம்வகுக்கவரு
நித்திரையாய்ச்செத்தவர்க ணிற்கவரு—மெத்தியே (உஎங)

சீடர்களையூரெங்குந் தேடித்திரட்டுதலே
பீடுடையசெய்கை யென்றுபேசவரு—மாடுமுத (உஎச)

லாமுயிரின்காதி லமைத்தோனுயிரினையூ
தாமையினற்சீவ னற்றதாக்கவரும்—யாமெவையுந் (உஎரு)

தீனியெனக்கொண்டுகொன்று தின்னவரும்வேதமெலா
மானிடர்தங்காதையென வைக்கவரு—மேனிரையே (உஎசு)

சாமியசைவாடச் சலமிருந்தாலசலந்தான்
பூமியிருந்தல்லாற் பொருந்துமோ—பூமியது (உஎஎ)

முன்னேயுண்டாகி முடிந்துளதேற்றேவனதைப்
பின்னேயுண்டாக்கியதாய்ப் பேசுவதென்—முன்னமிருட் ()

கண்ணுறைந்தவேகோவா காரிருளும்பேரொளியும்
பண்ணினனென்றல் பழுதலவோ—மண்ணதனைப் (உஎகூ)

பல்பூண்டைச்செய்யப் பணித்தாலஃதெல்லாப்
புல்பூண்டுந்தேர்ந்து புரிந்திடுமோ—வல்லும் (உஅ0)

பகலுமிதுவென்னப் பகலவனில்லாமற்
புகலவகையுண்டோ புகலாய்—பகலவனுஞ் (உஅக)

செஞ்சுடரில்லாமற் றினமூன்றுசென்றதீ
யஞ்சாதுரைப்பதுமோ ராச்சரியந்—தஞ்சாமி (உஅஉ)

மானிடரின்சாயலது வாய்த்துளனேற்சாயலுக்குத்
தானிடமாம்ரூபம்வந்து சாராதோ—வேனவனைத் (உஅங)

தோற்றாவரூபியெனச் சொல்லுவதித்தோற்றமெலாந்
தோற்றாவிடத்துத் தொழிலென்னோ—வாற்றலுடன் (உஅச)

றன்சாயல்போனரனைத் தந்துநரன்கண்ணிலனேற்
கொன்சாருந்தேவன் குருடனோ—முன்சேர்ந்து (உஅரு)

தன்னைவணங்கச் சமைத்தானேன்மாக்கள்பல
ரென்னைவணங்கா திகழ்ந்துரைத்தன்—முன்னை (உஅசு)

வினையின்றிச்சீவர்களை மேல்கீழாய்ச்செய்த
தெனையோவிருப்பு வெறுப்பென்னோ—மனையாளை (உஅஎ)

நல்லதுசெய்தோம்ப நரனெலும்பிலேபடைத்தா
லல்லதுவுஞ்செய்த லழகேயோ—நல்லதென (உஅஅ)

வொன்றைநினைக்க வதுவொழிந்திட்டொன்றாயிற்
றென்றல்கடவுட் கியல்பாமோ—வன்றவனோர் (உஅகூ)

தோட்டமொன்றுசெய்ததிற் றோற்றும்பலன்பெறவோ
வாட்டமிலாச்சீவ மரம்வைத்த—நாட்டந்தா (உகூ0)

னென்னோமனிதனைமுன் னேமாற்றிக்கொல்வதற்கோ
பின்னோக்கமென்னோநீ பேசிடா—யந்நாளின் (உகூக)

மாறாகத்தேவனையும் வஞ்சிக்கப்பாம்புளதேல்
வேறாயோர்தேவால் விதித்துளதோ—கூறுமந்தப் (உகூஉ)

பாம்புநரனுக்கரிய பார்வைதந்ததத்தேவன்
சாம்பரிசுதந்தான் சதுரரெவர்—நாம்புசிக்கப் (உகூங)

பக்கிமிருகத்தையுண்டு பண்ணினால்யாமவற்றின்
குக்கிக்கிரையாதல் கூடுமோ—மிக்கிளைத்து (உகூச)

வேலைசெய்வோரோர்நாள் விடாயாற்றநின்றிடுதல்
போலிருப்போன்றேவனெனப் போகுமோ—ஞாலத்து (உகரு)

வானமழைபெய்யாமுன் வந்துபனிபெய்ததென்று
லேனதனைக்கேட்போ ரிகழார்கள்—தானியா (உகசு)

மோர்விளக்கில்வந்தே யுதிக்கும்விளக்கென்னச்
சார்வதற்குச்சிவன் சடப்பொருளோ—நேரோவ்வாத் (உகஎ)

தீவினையிலற்பத்தைச் செய்தோர்பலசெய்தோர்
தீவினையேமுற்றுகச் செய்திடுவோர்—தீவினைக்க (உகஅ)

ணெத்தனையோபேத மிருக்கவவையாவினுக்கு
நித்யநரகத்தழுத்த னீதியோ—நித்திரைதீர் (உகக)

ஞாயத்தீர்ப்புக்கொடுக்கு நாளின்றேவந்துநினு
மாயுமனிதரெல்லாம் வந்தெழுந்தாற்—சாயாது (௩00)

நிற்குமோபூமி நெருங்கநெருங்கமென்மே
லொக்கவடைத்தாலு முலகங்கொள்—இற்குமோ (௩0க)

வாற்றுமணலெல்லா மளவிட்டாலும்முலகிற்
றோற்றியிறந்தோரெண் டொலையாதே—யாற்றவே (௩0உ)

தாகித்தோர்நீர்தேடுந் தன்மையெனச்சற்குருவை
மோகித்தோர்தேடன் முறையன்றி—யூகித்துச் (௩0௩)

சீடர்களைத்தாம்வலுவிற் சேர்க்கத்தெருத்தெருவாய்த்
தேடிக்குருமார் திரிவாரோ—கூடியுள (௩0ச)

சீவன்சரமடையச் செய்யவிலையேலவைகள்
யாவுநமைப்போல்வாழ் வமைவானேன்—சீவ (௩0ரு)

னறிவினுயர்வென்னி லவையைந்தாறுய்மாறப்
பிறிதுபிறிதுதிலனே பேதா—யறிவன் (௩0சு)

விதியாயென்றென்றும் விதித்தவிதிதப்பிப்
புதிதாய்ப்பழயதாய்ப் போமோ—விதுபோற் (௩0எ)

பலசரக்குக்குப்பையெலாம் பார்த்தாலவற்றுட்
சிலசரக்குங்கிட்டா து சேர்த்தே—யலகிலந்தச் (௩0அ)

சொற்பதரெல்லாம்புடைத்துத் தூற்றினுலாங்கவற்று
ளற்பமணியேனு மகப்படா—விற்பனர்க (௩0௯)

டர்க்கநிறைகோலாற் சரிதூக்கியுத்தியெனுங்
கற்கிடையேமாற்றுரைத்துக் காட்டினுற்—பற்கெஞ்சிப் (௩௧0)

பையவிழித்துப் பதைப்புற்றுநாக்குளறிக்
கைவிரித்துத்தேவசித்தங் காணென்பார்—மெய்யுணர்ந்தோர் ()

தட்டிப்பேசாதுவிட்டாற் சண்டப்ரசண்டமதா
யெட்டிப்பார்ப்பார்க ளிவர்கள்வயப்—பட்டுநீ (௩௧௨)

பாம்பின்வாய்த்தேரை பருந்தின்காலாகுவெனத்
தேம்பிமடியாமற் றிரும்பென்றுன்—வீம்புரைத்து (௩௧௩)

நின்றமனஞ்சோர்ந்து நெடுமூச்செறிந்துதிகைத்
தொன்றுந்தெரியா தொருமுகுர்த்தஞ்—சென்றதற்பி (௩௧௪)

னந்தக்கிறிஸ்தே சவதரிக்கப்பல்கால
முந்தவதைக்கண்டு மொழிந்ததனு—லந்தவுரை (௩௧௫)

வேதமென்றுசொல்லி வெகுபேரனுசரிக்க
வேதிப்படிக்குரைத்தீ ரென்றேன்யா—னேதக்கேள் (௩௧௬)

பின்னர்நிகழ்வதனைப் பேசுவதுதான்வேத
மென்னப்படுமோ வினிவருதன்—முன்னுணர்ந்து (௩௧௭)

சோதிடங்கற்றோர்கள் சுலபமாயாவருக்கு
மோதிடாங்காணுத துண்டோதான்—வாதிடமேப் (௩௧அ)

பித்துரையிலேசு பிறப்பதுவுஞ்சாவதுவு
மொத்தேயெடுத்துரைத்த துண்டுகொலோ—சத்தியமா (௩௧௯)

யன்னோன்சரிதங்க ளாதியந்தமாயதனுட்
சொன்னலோர்காணுந் துணியலாம்—பின்னவர்கள் (௩௨௦)

வேலிதனக்குக் கரட்டோணன்சாட்சியெனல்
போலப்பலவும் பொருத்துவர்காண்—மேலதுவென் (௩௨௧)

றன்னதொருநூலை யனுசரிக்கும்யூதரெலா
மின்னமதைப்பொய்யென்ப தென்னையோ—வன்னவருட் ()

சுன்னத்தைத்தள்ளாத் * துருக்கரதைப்பொய்யாமென்
றென்னத்தினலிங் கியம்புகிறு—ரன்னதைத்தா (௩௨௩)

னங்காட்டிலுள்ளோ ரனேகரருவருத்தா
லெங்காட்டிலுள்ளோருக் கேற்குமது—முன்னோர் (௩௨௪)

பெரிதும்வருந்திப் பிழைத்திறந்தமுன்னைச்
சரிதமெலாம்வேதமோ சாற்றாய்—சரிதங்கேள் (௩௨௫)

பெட்டியொன்றிலே **னோவா**தன் பெண்டுபிள்ளையாதியுடன்
சிட்டியொவ்வொன்றுயொருங்கே சேர்ந்தேறிப்—பெட்டியோ ()

டந்தரத்திலேமிதந்து **அரராத்**மலைமேலே
வந்தடைந்தாரென்ற மசக்கதையும்—வந்திடுங்காற் (௩௨௭)

சாமியெதிர்வந்து சலத்திரளினலினிமேற்
பூமியழியாதென்று போதிக்க—நேமியொன்றை (௩௨௮)

வானத்தில்வைத்ததுவும் வன்மதுவாற்றந்தையினைக்
**காணன்**சிரித்த களிக்கதையு—மானவர்செய் (௩௨௯)

பாபேலின்கோபுரத்தைப் பார்த்துப்பலபிரிவாய்
மாபேதஞ்செய்து வகுத்ததுவும்— **ஆபிரகாம்** (௩௩௦)

* துலுக்கர் என்றும் வழங்குகிறது.

சந்ததியைப்பெற்றதுவுஞ் சக்களத்தியாற்சாறாள்
சந்ததியைப்பெற்ற தனிக்கதையு—மந்நா (௩௩௧)

ளாண்குறியின்றோலை யறுத்தலுந்தேவார்ப்பணமாய்
நாண்குலையுஞ்செய்கை நடத்தியதும்—வீண்குறித்துச் (௩௩௨)

சோதேம்கொமோறா வாய்ச் சொல்லுந்தேயங்களின்மேற்
றீதோர்ந்துதேவன் சினந்ததுவுந்—தூதோர்கள் (௩௩௩)

புக்கதுவுமந்நாட்டோர் பும்மைதுனம்விரும்பித்
தொக்கதுவுந்தேடித் தொடர்ந்ததுவு—மிக்கவவர் (௩௩௪)

லோத்தின்மனையி னுழைந்துவிருந்துண்டிருந்தத்
தேத்தவரைக்கண்கெடவே செய்ததுவும்—லோத்தை (௩௩௫)

மலையேற்றியூரழித்த வந்நிலைமைநோக்கித்
தலைவியப்புத்தூணாய்ச் சமைய—மலைமுழையிற் (௩௩௬)

கண்ணுறங்கும்போது களிமதுவையூட்டியவன்
பெண்கள்புணர்ந்த பெருங்கதையு—மண்மிசையே (௩௩௭)

யீசாக்குக்கண்கெட் டிருக்குநாள்யாகோபு
ஏசாபோல்வஞ்சித்தே யெத்தியது—மேசா (௩௩௮)

கொலைசெய்யத்தீர்மானங் கொண்டதற்குத்தப்பி
யலைவான் யாகோபு மகன்றே—விலையாகி (௩௩௯)

யாடுகளின்மேய்ப்பா லனேகமணஞ்செய்ததுவு
மாடுகளைமோசத்தா லார்ச்சித்து—வீடடங்க (௩௪௦)

வோட்டமெடுத்ததுவு மோர்சாதிமாக்கள்வந்து
காட்டிலவன்மகளைக் கற்பழிக்க—கேட்டஞ்சி (௩௪௧)

வஞ்சித்துக்கொன்ற மதிக்கதையுமூத்தமகன்
மிஞ்சியவன்பெண்டுடனே மேவியதுஞ்—சஞ்சரித்தே (௩௪௨)

யூதாமருமகளை யோரிரவிலேபுணர்ந்து
திதார்கருப்பமுறச் செய்ததுவுஞ்—சூதாக (௩௪௩)

யோசேப்மறுதேய முற்றதுவுமாங்கொருத்தி
யாசையாய்ச்சேரற் கழைத்ததுவும்—யோசனையாற் (௩௪௪)

சொற்பனத்தினுட்பொருளைச் சொல்லியபின்வாழ்வுபெற்றுப்
பற்பலவாய்வாழ்ந்த பழங்கதையு—மற்பவிலைக் (௩௪௫)

காலத்திற்சுற்றத்தார் கண்டடுத்துவாழ்கதையும்
ஞாலத்தவனென்பு நாட்படவே—கோலத்தில் (௩௪௬)

வைத்தகதையும்மவர்கள் வர்த்திக்கநாட்டரசன்
கைத்தகதையுங்கொல் கடுங்கதையு—மத்ததியின் (௩௪௭)

மோசேபிறந்ததுவு மூடியொருபேழையிலே
மாசேற்றிப்புற்புதரில் வைத்ததுவு—நேசமுட (௩௪௮)

னந்நாட்டரசன்மக ளக்குழவியைவளர்த்த
பின்னுளவன்பிழைத்த பெற்றிமையு—மந்நாளிற் (௩௪௯)

றங்கள்குலப்பகைவன் றன்னைத்தனிமையிற்கண்
டங்கவனைக்கொன்றுகர வாயொழுகித்—தங்கியதுஞ் (௩௫0)

சண்டைவினையாலச் சதிக்கொலைமைதான்வெளிப்பட்
டண்டையயலார்க ளறிந்துகொண்டு—மிண்டதனை (௩௫௧)

யரசற்கறிவிக்க வாங்கவனுங்கோபம்
விரவிக்கொலைபுரிய வேண்டித்—துருவிடுங்கா (௩௫௨)

லாக்கினைக்குத்தப்பிப்போ யாசாரியனுடு
மேய்க்கியெனவடைந்து விஞ்சைசெறி—மார்க்கமெலாங் (௩௫௩)

கற்றுத்தன்றுட்டதெய்வங் கைவந்திடச்சித்தி
பெற்றுத்தன்சாதியரைப் பின்கூடி—யெத்தி (௩௫௪)

யடிமைத்தனநீக்கி யாளுகட்பாறேன்
வடியுநல்லதேயத்தே வைத்துக்—குடியேற்று (௩௫௫)

மாசைகொணர்ந்தி யழைத்துவந்துதன்தேவைப்
பூசைபலியாதிகளாற் போற்றுவித்து—மாசனங்க (௩௫௬)

டப்பிவிலகாது சண்டையிடற்குந்தனதெண்
ணப்படியேகேட்டு நடத்தற்கு—மொப்பியதோர் (௩௫௭)

மார்க்கமெனப்பற்பலவா மாயவித்தைசெய்ததுவுந்
தீர்க்கவிதிவிலக்குச் செப்பியவை—யார்க்குமினி (௩௫௮)

யென்றுமிருக்க வியம்பியதைவிட்டுப்பொன்
கன்றுதொழத்தேவன் கனன்றதுவு—மன்றொருவன் (௩௫௯)

வேலைசெய்யாநாளில் விறகெடுக்கக்கொன்றதுவுஞ்
சீலமெலாம்ரத்தத்தாற் செய்ததுவு—மேலடைய (௩௬௦)

வெண்ணிவந்ததேயம்போ யெய்தாமுன் மோசேயிம்
மண்ணிலிறந்து மடிந்ததுவு—மண்ணலா (௩௬௧)

**யோசுவா**வென்பான்பின் னாற்றதுவுமன்னவனத்
தேசம்பெருகச் செயித்ததுவு—மாசையினால் (௩௬௨)

**ஈப்தா**வெனவொருவ னீன்றமகளைப்பலியிட்
டாப்தமுடனூரையர சாண்டதுவுந்—தீப்தியுடன் (௩௬௩)

**சிம்சோ**னொருசிங்கத் தேன்கதைக்காய்முப்பதுபேர்
தம்சோர்வுகண்ட தனிக்கதையு—மெம்சோர்வை (௩௬௪)

மாற்றலருமெய்தி மடிகவெனவீடிடிக்கு
மாற்றலுளோன்கண்ணறைய னாகியே—சீற்றமுடன் (௩௬௫)

பட்டதுவும்**லேவியன்**வைப் பாட்டியைப்பல்லோர்புணர்ந்து
விட்டதனாற்போர்புரிந்து வீந்ததுவு—மிட்டபந்துக் (௩௬௬)

காகக்கொலைசெய்து கன்னியரைத்தேடியது
மேகும்வழியிற்பெண் ணெடுத்ததுவுஞ்—சாகக் (௩௬௭)

கணவன்றனைக்கொடுத்த காரிகைரூத்துக்கோர்
கணவனிருமித்த கதையு—மணமகனாய்ச் (௩௬௮)

சாமுவேல்தோன்றியதுஞ் சாட்சியாம்பெட்டிகவர்
காமுகரைநோயாற் கருக்கியதுஞ்—சா மு வே ல் (௩௬௯)

சவுலென்றொருவன் றனக்கரசுதந்து
நவமாய்முடிசூட்டு நண்புஞ்—ச வு ல ர சை த் (௩௭0)

தாவீதடையச் சபித்ததுவுந் தா வீ தை
யோவாதுகொல்ல வுசாவியதுந்—தா வீ து (௩௭௧)

நாபால்மதுவப்ப நல்கேனெனனோக்கிக்
கோபாவேசத்தாற் கொலச்செல்லக்—கோபாலர் (௩௭௨)

தம்மொழியால் நா பா லி ன் றாரமெதிர்தோன்றியது
மிம்மெனவே நா பா லிறந்ததுவுஞ்—செம்மி (௩௭௩)

யவன்பெண்டைத் தா வீ தணைந்ததுவும்போரிற்
ச வு லிறந்துநேர்ந்த சழக்குந்—தவமாகத் (௩௭௪)

தா வீ து பூசைசெய்து சாமிசெய்யநோக்கியிகழ்ந்
தாவீதென்னென்றமனை யாட்டிபிள்ளை—மேவாது (௩௭௫)

வன்மலடியாக வருந்தியுழலும்படித்தே
வன்மகிமைசெய்ததுந் தா வீ த ர ச ன்—றன்மனையி (௩௭௬)

லுப்பரிகைமேலே யுலாவுகையின்மாதவிடாய்க்
கப்பின்முழுகுபற்சேபாளைக்கண்—டப்பொழுதே (௩௭௭)

கொண்டுவரச்செய்தவளைக் கூடியவள்கர்ப்பங்
கொண்டுவிட்டாளென்ற குறிப்புணர்ந்து—தண்டுடன்போந் ()

தன்சேவகனுமத் தையல்கணவர்கூவி
யுன்சேரிசெல்லென் றுரைக்கவவன்—மன்சேனை (௩௭௯)

யுத்தமுடியா துடன்படேனென்றிடவன்
மத்தைமனதில்வைத்து மாற்ருேராற்—றத்திரமாய்க் (௩௮0)

கொல்லும்படிக்குக் குறித்தெழுதிக்கொல்லுவித்துப்
புல்லும் ப த் சே ப ா ளைப் புல்லியே—நல்லவன்போற் (௩௮௧)

**சாலோமோ**னென்ற தனயனைப்பெற்றீந்ததுவு
னோலாவொருமகன் **அம்நோ**னென்பான்—மாலேறித்(௩௮௨)

தன்னேடுடன்பிறந்த **தாமாரை**வஞ்சித்தம்
மின்னேடுவன்மையாய் மேவியபின்—பென்னே (௩௮௩)

வவளைமிகவெறுக்க **அப்சலோ**ம்கோபித்
தவனைவதைத்த வழகும்—புவனியது (௩௮௪)

தன்குடையின்கீழடங்கச் சா லோ மோ ன் ராசாங்க
நன்குடையதென்றுபுகழ் நாளையிலே—முன்குறித்த (௩௮௫)

கோவிலொன்றுகட்டியதுங் கொண்டாட்டஞ்செய்ததுவுந்
தேவியர்பல்லோர்தோளைச் சேர்ந்ததுவும்—பாவியெனப் (௩௮௬)

பட்டிறுதியின்மாறு பட்டிறந்தபின்கன்றுக்
குட்டிக்குப்பூசைவந்து கூடியது—மொட்டி (௩௮௭)

மலிவாயரசர்முன்னை மார்க்கத்திற்சேர
**எலியா எலிசா** இயற்றியதுஞ்—சலியாது (௩௮௮)

நாடாண்டிறந்தொழிந்த ராசாக்கடங்கதையு
மாடார்**பிரசங்கி**வன்கதையும்—பீடழியச் (௩௮௯)

சாத்தான்செய்**யோபு**சரித்திரமுஞ் சா லோ மோ ன்
ரேத்திரமும்வேறுபலர் சொற்திரளுஞ்—சேர்த்தியே (௩௯0)

வேதமென்றுசொன்னலிம் மேதினியிலெக்கதையை
வேதமலவென்று விலக்குவது—வேதத்துள் (௩௯௧)

வந்ததெல்லாங்கேட்க வழங்காக்கதையானு
லந்தக்கதைமறைதா னுகுமே—யிந்தக் (௩௯௨)

கதைபலவும்பற்பலவி கற்பமுளவேல்யா
மெதைமுதனூற்றேவநூ லென்பா—மதையன்றி (௩௯௩)

யேசுகதைசீட ரெழுதுதிருபக்கதைவீண்
வாசகங்களும்வேத மாயினவே—பூசைக் (௩௯௪)

குருமார்சரிதமவர் கூட்டத்தின்கொள்கை
யொருசாரார்வேதத் துரைப்பார்—கருதுங்கா (௩௯௫)

லாலையில்லாவூருக் கிலுப்பைப்பூச்சர்க்கரையைப்
போலினிதாமென்றல் புதுமையோ—மூலையிலே (௩௯௬)

தங்குங்கிணற்றுத் தவளையொப்பார்நாட்வேள
மெங்கறிவாரையோ விதுபோன்மற்—றங்குள்ள (௩௯௭)

கோட்டாலைசொல்லவொரு கோடிநாட்செல்லுமிதைக்
கேட்டாருங்கொட்டுவார் கெக்கிலிகா—ணட்டிலே (௩௯௮)

நீரளவேயாகுமா நீராம்பருன்கற்ற
நூலளவேயாகுமா நுண்ணறிவு—மேலைத் (௩௯௯)

தவத்தளவேயாகுமாந் தான்பெற்றசெல்வங்
குலத்தளவேயாகுங் குணங்காண்—கலப்பாய் (௪00)

நிலத்திற்பிறந்தவை கார்காட்டுங்காட்டுங்
குலத்திற்பிறந்தார்வாய்ச் சொல்லென்—றிலக்கியத்துட் (௪0௧)

சொன்னவிதிக்கேற்பவர் தொன்னூலினுசாரஞ்
சென்னீர்தெளித்தல்கொலை செய்தலே—பின்னூலு (௪0௨)

ளேசுசதையு மிரத்தமுமுட்கொண்டப்பங்
கூசுமதுவுங் குடித்திடுதல்—பேசிடுங்கா (௪0௩)

னல்லாரெனப்படுவ தியாதெனில்யாதொன்றுங்
கொல்லாமைசூழு நெறியென்று—வல்லார் (௪0௪)

வகுத்தமைக்குமுற்றிலுநேர் மாறாய்க்கொலையே
மிகுத்தமையால்யாங்கூறன் மேலென்—றொகுத்தாற் (௪0௫)

பெருமைக்குமேனைச் சிறுமைக்குந்தத்தங்
கருமமேகட்டளைக் கல்லாஞ்—சரிதமெலாம் (௪0௬)

வேதமாமென்று வெகுபேர்மதிப்பதா
லாதிமதமாமென் றறைந்தாய்நீ—பேதா (௪0௭)

யுலகின்மலிந்தவெலா முத்தமமோசெம்பொன்
னிலைகுறைந்துந்தாழ்வுபட்டோ நிற்கு—மலைகடரூன் (௪0௮)

பென்னம்பெரிதே யெனினுஞ்சிற்றூறலென
நன்னீர்மனிதர்க்கு நல்குமோ—வின்னும் (௪0௯)

விரிவாய்ப்பலவுலகின் மேயவருண்ஞானி
யரியனொருவனென வான்றோர்—தெரிய (௪௧0)

வுரைத்தாரதனா லுயர்வுகுறைந்து
தரைப்பாலிழிவுமிகச் சாரு—முரைப்பானே (௪௧௧)

னன்றெல்லாந்தீதாயுந் தீதெல்லாநன்றாயுங்
கன்றிவரத்தக்க கலிகால—மென்றென்றும் (௪௧௨)

பொல்லாதார்நல்லாராய்ப் பொங்கியருமறைநூல்
கல்லாதார்வாழுங் கலிகால—மில்லாளை (௪௧௩)

யன்னியர்தோள்சேர்த்தி யரும்பொருளைத்தேடியிழி
கன்னியர்தோள்சேருங் கலிகாலம்—மன்னரென்போர் (௪௧௪)

பாதகங்கள்செய்து பணம்பறிக்குமாந்தரொத்துக்
காதகங்கள்செய்யுங் கலிகாலங்—தீததனு (சகரு)

லெள்ளுண்போர்தள்ளுண்போ ரேசுண்போர்மாசுண்போர்
கள்ளுண்போர்க்கான கலிகால—முள்ளுள்ளே (சகசு)

யெக்குப்பெருத்துமத மேற்படுத்தித்தூஷணத்தீ
கக்குங்கொடிய கலிகால—மிக்குலகி (சகஎ)

லீட்டுந்தவமாதி யின்மையாய்த்தெய்வநிலை
காட்டாதொழிக்குங் கலிகாலங்—கூட்டுகலி (சகஅ)

காலமெலாம்வந்தோர் கனத்தவடிவெடுத்தாற்
போலவஃதிங்குப் புகுந்ததுகாண்—மேலு (சககூ)

மரசர்கடங்கோட்பாடு மானமையாலோங்கி
முரசமெனநின்று முழங்கும்—பிரசைகடாம் (சஉ0)

மன்னவர்கள்செல்லும் வழியேவழிக்கொள்வா
ரென்னுமுரையெம்மா லியம்பியதோ—பின்னுமது (சஉக)

சற்சமயநூலுணர்ச்சி சாராநாட்டுப்புறத்தி
னிற்செறிந்தகீழ்மக்க ளென்றறையுங்—கற்செறிந்த (சஉஉ)

புல்லறிவோராஞ்சிறிய புட்குலத்தையுட்படுத்த
மெல்லியராங்கண்ணிபல மேவுவித்தும்—வல்லகல்விச் (சஉங)

சாலையென்றுசொல்பஞ் சரமமைத்துங்கைக்கூலி
வேலையென்றுசொல்லும்வலை மேல்விரித்து—மூலைதொறும் ()

பண்ணுமுபதேசப் பயில்குரலிற்கூவுவித்து
முன்னுபலபண்டமெனு மொட்டுவைத்து—மண்ணவரைச் ()

சேர்த்துத்திரட்டவல்ல செய்கையெலாஞ்செய்தக்காற்
போர்த்துமந்தக்கூட்டம் பெருகாதோ—பார்த்துணரா (சஉசு)

தையோமதிமயங்கி யம்மதத்திற்சேர்ந்ததன்றி
மெய்யோர்ந்துதேர்ந்ததன்கண் மேவினர்யா—ருய்யுநெறி (௪௨௭)

காட்டுமென்றுள்ளாய்ந்து கலந்தவரார் தங்கள்பவ
மோட்டுமென்றுநாடி யுணர்ந்தவர்யார்—மீட்டுமெதில் (௪௨௮)

வந்துபுகுந்த மனிதருள்ளும்வன்மையுடன்
முந்தவதிலுள்ள மூப்பருள்ளுஞ்—சிந்தைப் (௪௨௯)

புலையுங்கொலையுங் களவுந்தவிர்ந்த
நிலையுணர்ந்துநீங்கியார் நின்றார்—தொலையா (௪௩0)

வபசாரமெல்லா மகற்றவிடினும்
விபசாரஞ்செய்யாதார் விட்டார்—சுபமாக (௪௩௧)

மாதுசங்கஞ்சேர்ந்து மருவினரல்லாதுயர்ந்த
சாதுசங்கந்தேடிச் சார்ந்தார்யார்—வாதமிட்டுச் (௪௩௨)

சந்தைக்கடைபோலச் சண்டைசெய்வாரல்லாது
சிந்தையைமல்சற்றேனுந் தீர்ந்தார்யா—ரந்திசந்தி (௪௩௩)

மூக்கறையர்ஞானமென மூலைதொறும்பேசலன்றி
யாக்கைநிலைசோதித் தறிந்தார்யா—ருக்கமுடன் (௪௩௪)

செல்வத்தைத்தேடுதற்குச் சிந்தைவைத்தாரல்லததை
யல்லலென்றுகைவிட் டகற்றினர்யார்—புல்லு (௪௩௫)

மினக்கோட்டமெம்மு ளிலையென்பதல்லான்
மனக்கோட்டநீங்கினர் மற்றார்—கனக்கவே (௪௩௬)

றெந்தச்சமயத்து மெய்தாச்சுகமதனை
யந்தச்சமயத் தடைந்தார்யா—ரந்தச் (௪௩௭)

சமயம்பெருகிடினுந் தாழ்காலம்வந்தா
லிமையிலழிவெய்தி யிறுத—லமையுமந்தத் (௪௩௮)

துப்பற்றமார்க்கத்திற் றேயாதேமாயாதே
கைப்புற்றுநெஞ்சிற் கவலாதே—யெய்ப்புற்றுப் (௪௩௯)

பேய்த்தேரைநீரென்று பின்றொடர்ந்துநீர்நசையாற்
போய்த்தேடல்போலப் புலம்பாதே—வாய்த்தவெளிப் (௪௪௦)

பட்டப்பகலிற்கண் பார்வையிலாக்கூகையைப்போற்
றட்டித்தடவித் தவியாதே—கிட்டி (௪௪௧)

யவசமயத்துள்ளாழ்ந் தலையாதேயுன்றன்
சுவசமயந்தேரென்று சொன்னான்—சிவசமயத் (௪௪௨)

துண்மையெல்லாநெஞ்சத் துறுத்தினான்வேற்றுமதத்
திண்மையெலாமில்லாமற் செய்திட்டா—னன்மைசெறி (௪௪௩)

பத்திநெறியும் பழவடியார்தாள்பணியும்
புத்திநெறியும்மெனக்குப் போதித்தான்—சித்திநெறி (௪௪௪)

காட்டினானென்கட் கலந்துநின்றதீக்குழுவை
யோட்டினான்வேறோ ருருச்செய்தான்—வேட்டுவனோர் (௪௪௫)

மென்புழுவைத்தன்படிவ மெய்துவித்தவண்ணமெனத்
தன்புதியகோலஞ் சமைப்பித்தான்—முன்பு (௪௪௬)

பதைப்பற்றிறுமாந்து பாறையொத்தநெஞ்சைப்
பதைப்புற்றுருகப் பணித்தான்—புதைத்தவன்பா (௪௪௭)

லெங்குமிருப்பா னிறையெனினுமூர்த்தியிடைத்
தங்கும்விசேடமெனச் சார்வித்தா—னங்கெனக்குக் (௪௪௮)

கண்ணிணைநீர்வார்க்கவுடல் கம்பிக்கமெய்ப்புளக
நண்ணவொருசால நவிற்றினான்—மண்ணிலையன் (௪௪௯)

றாட்டுணையிலென்றலையைத் தாழ்த்திப்பணிந்தெழுந்து
மீட்டுமொழிந்தேனோர் விண்ணப்பம்—வாட்டு (௪௫௦)

மனவிருளையில்லாமன் மாற்றவுதயஞ்செய்
தினகரனேயானந்தத் தேனே—யினிதான் (சருக)

சொந்தச்சமயத்தைத் தூஷணித்துக்கைப்பான
வந்தச்சமயத்தை யாதரித்தே—யெந்தை (சருஉ)

தனையுமவனடியார் தங்களையும்வேடத்
தினையும்பலவிகழ்ச்சி செய்த—வெனையும் (சருந)

பொறுக்குமோகோபித்துப் புன்னரகிற்றள்ளி
யொறுக்குமோவேண்டா தொதுக்கி—வெறுக்குமோ (சருச)

செய்நெறிவேறென்றுந் தெளிகிலேன்றீவினையேற்
குய்நெறிதானுண்டோவென் றோதினேன்—பையவே (சருரு)

யென்முகத்தைநோக்கி யிரங்கியருளியெங்கோன்
புன்முறுவல்சற்றே புரிந்தருளி—முன்மதித்த (சருசு)

வேசுசமயத்துணர்த்து மெங்காளுமீளாத
வாசநரகை மதித்தனையோ—வீச (சருஎ)

னலமிலனண்ணார்க்கு நண்ணினர்க்குநல்லன்
சலமிலன்பேர் சங்கரன்காண்—மலையெடுத்த (சருஅ)

வல்லரக்கனுக்குமிக வன்மைசெய்ததக்கனுக்கு
நல்லவரம்பலவு நல்கினு—னெல்லவரு (சருகூ)

மாரமிர்தமுண்டிடவா னாலாலமுண்டமைந்த
காரமருநீலமணிக் கந்தரத்தா—னீரகமா (சகூ0)

மன்பில்லார்மால்பிரம ராலுங்காண்பரியா
னன்புடையார்புன்புலைய ராயிடினுந்—தன்பெருமை (சகூக)

யெண்ணுதெழுந்தருள்வா னெவ்வுயிர்க்குமெய்ப்பொருட்குந்
தண்ணாருளளிக்குந் தாயானுன்—மண்ணகத்தே (சகூஉ)

பெற்றெடுத்ததாயேதன் பிள்ளையைக்கைவிட்டக்கால்
மற்றதனைக்காப்பாற்று வார்யாரே—குற்றமொன்றுங் (௪௬௩)

கொள்ளான்குணமாகக் கொள்வான்றொழிலனைத்துந்
தள்ளானின்னச்சந் தவிர்திகாண்—வள்ளறனைப் (௪௬௪)

பற்றினானுன்னையவன் பற்றுவானெப்பற்றும்
பற்றாமனின்ற பரமேட்டி—யுற்று (௪௬௫)

மருத்துவன்றான்மந்த்ர மணிமருந்தானோயைத்
திருத்துதல்போற்சற்குரவன் றேர்ந்தே—பெருத்தபவ (௪௬௬)

மூர்த்திதலந்தீர்த்தமெனு மூன்றாலறமாற்றித்
தீர்த்திடுவெனென்றுமறை செப்புதலா—லார்த்திகொடம் (௪௬௭)

மூர்த்திதலந்தீர்த்தம் முறையாய்த்தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச்சற்குருவும் வாய்க்குங்காண்—கூர்த்தறிவாற் ()

றேராதுமுன்னிழைத்த தீவினைக்காயச்சமுட
னாராமைமின்பா லடைந்தமையாற்—சாராத (௪௬௯)

வேற்றுச்சமயந் தனைமதித்தவெம்பாவம்
மாற்றுங்கழுவாய் வகுக்கக்கேள்—தோற்றுகின்ற (௪௭0)

விந்தத்தலம்போல வெல்லாவிசிட்டமுமற்
றெந்தத்தலத்து மிலைகண்டாய்—முந்தையோர் (௪௭௧)

போற்றுதலம்பாவங்கள் போக்குதலம்வேதத்திற்
சாற்றுதலந்தானாய்ச் சமைந்ததல—மேற்றற் (௪௭௨)

குரியதலமிவ்வுலகத் துள்ளதலத்துள்ளே
பெரியதலமெம்மாலே பேசற்—கரியதல் (௪௭௩)

மானாலுஞ்சற்றே யறைவேன தன்பெருமை
மானார்கரத்து மழுவலத்தெங்—கோனானேன் (௪௭௪)

புற்றிற்சயம்பாகப் போந்ததலந்தேவர்கடங்
கற்றுத்தொழுதுசிட்டி கற்றதலஞ்—சற்றேனு (சஎரு)

மாலவனுங்காணு மலர்த்தாள்கண்டர்ச்சித்துக்
காலவனுர்முத்தி கலந்ததல—மேலாந் (சஎசு)

தலத்திலுயர்ந்த தலந்தேடிவானேர்
நலத்ததெனக்கண்டடைந்து நண்ணுதலம்—வலத்தாலே (சஎஎ)

கொம்பின்குளம்பின்வடுக் கொண்டருளிமெய்யடியார்
தம்பிறவிமாசுவடுத் தள்ளுதல—மம்போரு (சஎஅ)

கக்கண்ணன்கோமுனிவ னுகியடியர்ச்சித்துத்
தெக்கணகைலாயமொன்று செய்ததலம்—புக்கு (சஎகூ)

நடையனத்தான்பட்டிமுனி நாமமொடுபோந்து
வடகைலைசெய்து வசித்ததல—நடனமவர் (சஅ0)

பார்க்கும்படிருத்ர பாதத்திற்றீவினைக
டீர்க்குந்திருநடனஞ் செய்ததலஞ்—சேர்க்குமிகு (சஅக)

சீரார்மருதமலைச் செவ்வேளாலன்றமரர்
சூராதிவாட்டித் துதித்ததல—நேராத (சஅஉ)

பாவஞ்செயுஞ்சுமதிப் பார்ப்பானிறந்தொழியத்
தேவத்தலத்தவனைச் சேர்த்ததலந்—தேவர் (சஅங)

சமுகத்தவமானத் தான்முசுகுந்தன்றன்
சுமுகம்பெற்றோங்கிச் சுகித்ததலங்—கமுகங் (சஅச)

களத்தாள்பிருகுமகள் கைப்பற்றுசாப
முளத்தாமலிந்திரனு ருய்ந்ததலம்—பளத்தின்கண் (சஅரு)

வேதியனுமேனத்தை வேந்தறியாதெய்தபழி
காதியருணல்குங் கடவுடலந்—தூதிருளிற் (சஅசு)

சென்றாண்டதொண்டருக்குத் தேவியொடுநெல்வயற்க
ணன்றுபள்ளனாய்ப்போ யருளுதல—நன்றுணர்ந்த (௪௮௭)

தில்லைமுனிவோரழகு சிற்றம்பலஞ்செய்திங்
கெல்லையறுபூசை யியற்றுதலஞ்—சொல்லைநம்பக் (௪௮௮)

கைதூக்கிவ்யாசன்முனங் காசித்தலத்துரைத்த
பொய்தூக்குபாவத்தைப் போக்குதலம்—மெய்தூக்கிக் (௪௮௯)

கோசிகனார்போற்றியருள் கொண்டுதிரிசங்கினுக்குக்
காசினிவேறேயமைக்கக் கற்றதலம்—பேசிடுவோ (௪௯௦)

ரெல்லாங்கதிசெலல்பார்த் தேமனிந்தநற்றலத்தி
னல்லார்க்கேபத்திவர நாட்டுதலம்—பொல்லாக் (௪௯௧)

கிராதனாய்வாழுங் கிரனிறந்துங்கீழாய்
வராதுகதிமேலேற வைத்ததலம்—பராபரையா (௪௯௨)

ணற்றவத்தைச்செய்துபட்டி நாதரிடப்பாலமரப்
பெற்றுமகிழ்ந்தரங்கம் பெற்றதலங்—கற்றவர்க (௪௯௩)

டாங்குசிவசின்னந் தவத்தோர்சரிதமெலாந்
தீங்ககலவெங்கோன் றெருட்டுதல—மாங்குவிளை (௪௯௪)

நீற்றாலொருத்தியின்பேய் நீக்கியந்தப்பேயினுக்கு
மாற்றாலேமுத்தி யளித்ததலஞ்—சாற்றுமதன் (௪௯௫)

பேர்பலவாம்பேரூர் பிறவாநெறிவளருஞ்
சீர்பலசேர்மேலைச் சிதம்பரமிப்—பார்பரவு (௪௯௬)

மாதிபுரந்தென்கயிலை யாவினுயர்தேனுபுரம்
போதிவனம்ஞானபுரம் போகபுர—மாதியவாந் (௪௯௭)

தோய்ந்தோர்கள்பாவஞ் சுடர்முன்னிருளென்னத்
தேய்ந்தோடத்தீர்த்தளிக்குந் தீர்த்தங்க—ளாய்ந்தக்காற் (௪௯௮)

காஞ்சிநதியாதி கணிப்பிலவாமொவ்வொன்றும்
வாஞ்சையறிந்தேயுதவ வல்லனவாம்—பூஞ்சினைசேர் (௪௯௯)

திந்திருணியும்பனையுஞ் சென்மமிலையிங்கடைந்தோர்க்
கந்தமிலையென்பதனுக் கத்தாக்ஷி—யிந்தநக (௫௦௦)

ராவின்மயங்கிருமி யாதியடையாதென்னிற்
பாவநிரயத்தின் பயமுண்டோ—பாவமெலாஞ்

சேர்த்திவிழுங்கவொரு தீபகம்போல்வந்தபட்டி (௫௦௧)
மூர்த்திவிசேட மொழிவானேன்—மூர்த்திதனை (௫௦௨)

வந்தித்தோர்வேண்டும் வரம்பெறுவர்சிந்தையுள்ளே
சிந்தித்தோர்பாவமெல்லாந் தீய்த்திடுவர்—சந்தித்தே (௫௦௩)

தோத்திரித்தோரெய்தாச் சுகமுண்டோபாவங்கண்
மாத்திரமோசன்மவிடாய் மாறுமே—கோத்திரத்தி (௫௦௪)

லெள்ளாற்றருப்பணஞ்செய் திட்டோர்பெறும்பேற்றை
வெள்ளெனலும்புங்கல்லாய் விளம்புங்கா—னுள்ளவெலா (௫௦௫)

மென்னாற்சொலமுடியா தெண்ணிறந்தநாவுள்ளோன்
சொன்னாலும்பன்னாட் டொலையுமா—லுன்னிடத்து (௫௦௬)

நற்காலம்வந்த நலத்தாலிஃதுணர்ந்தாய்
துற்காலமெல்லாந் தொலைந்ததுகாண்—முற்காணும் (௫௦௭)

பட்டிப்பெருமானைப் பச்சைவல்லித்தாயுடன்கண்
டிட்டசித்தியெல்லாநீ யெய்துவாய்—துட்டசங்கஞ் (௫௦௮)

சேர்ந்தொழுகுபாவமுமுன் சென்மாந்திரப்பவமுந்
தீர்ந்தகலநெஞ்சந் தெளிந்துகளி—கூர்ந்தே (௫௦௯)

யருமையாயாரு மடைதற்கரிய
பெருமையெலாநல்கப் பெறுவா—யொருமையா (௫௧௦)

யிவ்வண்ணம்பன்னாணீ யெம்மான்பணிபுரிந்தா
லவ்வண்ணல்கண்ணாற் றருளியே—செவ்வண்ணக் (௫௧௧)

கோலமொளித்தோர் குருவடிவாய்வந்துதவ
சீலமுடன்றீக்கையெலாஞ் செய்தருளி—மேலாகுந் (௫௧௨)

தன்னிலையுநின்னிலையுஞ் சாருமுயிரின்னிலையு
முன்னிலையாய்க்காட்டி முறணறுப்பா—னிந்நிலையி (௫௧௩)

லையமொன்றுமில்லையென்றெ னையனருள்செய்துதிருக்
கையதனாலேநுதலிற் காப்பணிந்தான்—மெய்யை (௫௧௪)

விரிந்தபொருளால் விளம்பியவென்னையன்
பிரிந்தருளினானென்னைப் பின்னர்த்—தெரிந்துணரா (௫௧௫)

தங்கையுறும்பொன்னை யவமதித்துமண்ணினைத்தஞ்
செங்கையுறக்கொள்ளுஞ் சிறாரென்னத்—தங்கினேன் (௫௧௬)

கல்லெறியப்பாசி கலைந்துநன்னீர்காணுநல்லோர்
சொல்லுணரில்ஞானம்வந்து தோன்றுமெனச்—சொல்லுகின்ற

மூதுரையினாலென்றன் மூடஞ்சிறிதகன்றப்
போதுசிறுஞானமென்றன் புந்திவர—வோதும் (௫௧௮)

புனிதமொழியுரைத்த போதகனையானோர்
மனிதனெனமதித்த மாண்பா—லினிதாக (௫௧௯)

மெஞ்ஞானமுற்றும் விளங்கவிலையுள்ளத்தி
லஞ்ஞானமுற்று மகலவிலை—யஞ்ஞான்று (௫௨0)

தேசிகன்றனோக்கஞ் சிறிதடைந்தவாற்றாலும்
பேசியவனோடுறைந்த பெற்றியினா—னேசமது (௫௨௧)

பேரூரிற்பற்றிப் பிடரிபிடித்துந்தியென்னைத்
தேரூர்தெருவிற் செலுத்தவே—நேரேபோய்க் (௫௨௨)

கங்காசலத்துயர்ந்த காஞ்சிப்புனலாடிப்
பொங்குபலதீர்த்தம் புகுந்தாடித்—தங்குதிரு (௫௨௩)

நீற்றுத்திடரில்விளை நீரூடித்தேவர்குழாம்
போற்றுமருகிற் பொடியாடித்—தோற்றுபுகழ் (௫௨௪)

கொண்டாடிமேருவன்ன கோபுரத்தைக்கண்ணாரக்
கண்டாடியுள்ளக் கசிவாடித்—தொண்டர்தொழும் (௫௨௫)

பட்டிக்களிற்றின் பருத்தவிமானத்தடைந்து
கிட்டிக்கன்மப்படலங் கீறவே—குட்டிக்கொண் (௫௨௬)

டோரிரண்டுகையா லுபயசெவியும்பிடித்துப்
பாரிற்படிதோப் பணம்போட்டு—நேராய் (௫௨௭)

வலம்வந்துபோற்றி வரமிரந்துநீங்கிப்
புலம்வந்துகோவிலினுட் போகி—நலம்வந்த (௫௨௮)

கோபுரத்திலுட்புகுந்து கும்பிட்டுத்தெண்டெனவீழ்ந்
தேபுரளுமங்கப்ர தெக்கணமாய்த்—தீபுரத்தி (௫௨௯)

விட்டான்றிருச்சந் நிதிகண்டுதொழ்ந்தெழுந்தங்
கட்டாங்கபஞ்சாங்கத் தாற்பணிந்து—வெட்டுதுண்ட (௫௩௦)

நந்திப்பெருமா னகைமணிப்பொற்றாள்வணங்கி
வந்தித்துட்போக வரமேற்றுச்—சந்தித் (௫௩௧)

திரண்டாம்பிரகாரத் தெய்திக்கல்லாற்கீழ்ச்
சரண்டொழுவார்சன்மார்க்கஞ் சாரக்—கரங்காட்டி (௫௩௨)

மோனவழிதேற்றுபுசின் முத்திரையோடாங்கமர்ந்த
ஞானகுருதேசிகன்றா ளன்பணிந்தேன்—வானங் (௫௩௩)

குடியேற்றித்தேவர்கடங் கோமான்றலைக்கு
முடியேற்றிமூவுலகுஞ் சேவற்—கொடியேற்றிப் (௫௩௪)

பன்னிரண்டுகண்கள் படைத்தருளுஞ்செவ்வேளை
யென்னிரண்டுகண்களால் யான்கண்டேன்—முன்னர் (௫௩௫)

வணங்கிப்புறத்தொட்டி வார்புனலையள்ளி
யிணங்கிப்புரோக்கணித்துள் ளேகி—மணங்கமழுஞ் (௫௩௬)

சிங்கதீர்த்தத்தைச் சிரத்திலெடுத்துத்தெளித்துள்
ளங்கையினுன்மூன்றுதர மாசமித்துப்—பொங்கிமேற் (௫௩௭)

போந்திரண்டுதுவாரம் புரப்போர்பதம்போற்றி
யேந்திருச்சந்நிதிவந் தெய்தினேன்—றேய்ந்து (௫௩௮)

வினையெனவிட்டேக விடைகேட்காநிற்ப
நனையவிருகண்ணீர் நனைப்பத்—தினையளவு (௫௩௯)

மில்லாதவன்புபனை யென்னநனிபெருகச்
சொல்லாதவானந்தந் தோன்றியெழப்—பொல்லாப் (௫௪0)

பொருட்செறிவுசேர்ந்தடர்ந்த புந்தியிலன்றேதோ
தெருட்சிமருட்சி திகழ—வருட்செறிவொன் (௫௪௧)

றில்லையென்றுசொல்லு மெனக்குமஃதுண்டென்ன
வல்லையிலேபிரத்யட்ச மாய்விளங்க—நல்லவெலாம் (௫௪௨)

பெற்றேன்போற்பட்டிப் பெருமானையான்காணப்
பெற்றேனென்கண்படைத்த பேறுற்றேன்—சற்றேனுங் (௫௪௩)

கூசாதுனையிகழ்ந்த குற்றம்பொறுத்தியென்று
வாசாகயிங்கரிய மாற்றினேன்—பூசாரி (௫௪௪)

சாற்றுதிருவெண்ணீறு தந்தாரிதுபோல
வேற்றுநிமித்த மிலையெனவே—யேற்றுடலி (௫௪௫)

லங்கத்திமிர்ந்தே னகங்கொண்டேனுண்மாசுந்
தங்குபுறமாசுந் தள்ளினே—னங்கப் (௫௪௬)

பெருமான்றனக்கெனது பின்காட்டாதேகி
யொருமாநடனசபை யுற்றேன்—திருமா (௫௪௭)

னழகாத்திரிநா யகன்பொன்னாற்செய்தங்
கழகார்திருக்கயிலை யாக—வழகுசெய்து (௫௪௮)

கண்கொண்டுபார்த்தற் கடங்காதவோவியமா
யெண்கொண்டதேவர்க் கிருப்பிடமாய்—விண்கொண்டு (௫௪௯)

நின்றுநிலாவு நிலைபார்த்துத்தாயினைப்போய்க்
கன்றுதொடர்ந்த கணக்கேபோற்—சென்றழலிற் (௫௫௦)

பட்டமெழுகென்னப் பதைத்துருகிக்கோமுனிவர்
பட்டிமுனிவர் பதம்போற்றி—நெட்டிலைவேற் (௫௫௧)

கண்ணுடையவெங்கள்சிவ காமியுமைகண்களிப்ப
விண்ணுடையோர்கண்கள் விருந்தயர—வெண்ணுடைய (௫௫௨)

தோற்றந்துடியதனிற் றோன்றுந்திதியமைப்பிற்
சாற்றியிடுமங்கியிலே சங்கார—மூற்றமா (௫௫௩)

மூன்றுமலர்ப்பதத்தே யுற்றதிரோதமுத்தி
நான்றமலர்ப்பதத்தே நாடுகவென்—றுன்றோர்சொ (௫௫௪)

லைந்தொழிற்குந்தானே யதிபனெனக்காட்டுதற்காஞ்
சுந்தரமார்திவ்ய சொரூபமுடன்—வந்தனையோ (௫௫௫)

வின்றென்றெனைப்பார்த் திளமுறுவல்காட்டியைந்தும்
வென்றுள்ளோர்சிந்தை விமலமென—நின்றிலகு (௫௫௬)

மம்பலத்தேயாடுகின்ற வானந்தச்செந்தேனைச்
செம்பதுமபாதங்கள் சேவித்தேன்—கம்பிதங்கொண் (௫௫௭)

டச்சந்நிதியை யகலாதக்கன்றுசென்று
பச்சைக்கொடிபாற் படர்ந்துற்றே—னச்சியே (௫௫௮)

துற்கையொருபாலுந் துளவோனொருபாலு
நிற்குநிலைகண்டு நேசித்தேன்—சொற்கத் (ருருகூ)

திருப்போர்மனித ரெனவடைந்துபோற்றி
விருப்போடுகூட்டமாய் மேவு—நெருக்கத்துட் (ருசுo)

புக்கேன்விரைந்துகரும் பொன்காந்தஞ்சேருதல்போன்
மிக்கேனனிவிரைந்துன் மேவினே—னக்காலத் (ருசுக)

தெண்ணில்புவனங்க ளெல்லாங்கடைத்தேறக்
கண்ணிற்பொழியருணோக் கத்தழகு—மெண்ணில் (ருசுஉ)

வளமைதிகழும் வதனத்தழகுங்
களமாருமங்கலநாண் காப்புந்—தளதளவென் (ருசுங)

றெங்கும்ப்ரகாசித் திருளகற்றிமேனியெலாந்
தங்கியொளிவீசுபணிச் சார்பழகுஞ்—செங்கைசுட்டிச் (ருசுச)

சம்பந்தப்பிள்ளை தமிழ்பாடப்பால்சுரந்த
கும்பத்துணைநேர் குயத்தழகு—நம்பினருக் (ருசுரு)

கொல்லைப்புறச்சமயத் துள்ளுதிக்குமின்பமென
வில்லையுண்டென்னு மிடையழகு—மெல்லப் (ருசுசு)

புலம்பலம்பல்போலப் புரிநூபுரத்தின்
சிலம்பலம்புசேவடியின் சீரழகு—நலம்பலவுங் (ருசுஎ)

கண்ணாரக்கண்டு களிகூர்மரகதமாம்
பெண்ணாரமுதப் பெரும்பிழம்பை—யண்ணா (ருசுஅ)

வயர்ந்தேயொருசற்ற வசமுற்றுமீட்டுப்
பெயர்ந்தேமதிகூடப் பெற்றேன்—வயந்தவறி (ருசுகூ)

நாக்குளிரப்போற்றி நவின்றதுதிசெப்பியங்கு
நீக்கமுறவொண்ணுமை னின்றிடுங்காற்—பாக்கியத்தாற் (ருஎo)

கைத்தலத்திலுன்னிருக்கை கண்டேன்களிகூர்ந்து
சித்தத்தைநின்பாற் செலுத்தினேன்—றத்தையே (௫எ௧)

நேராயென்னைநோக்கி நீயாரென்றாற்போலோர்
சீரானவாக்குச் செவிபுகலு—மாராயா (௫எ௨)

தென்னையோதோற்றமஃ தென்றெண்ணியாய்ந்தபசும்
பொன்னையொக்கும்வாக்கைப் புறக்கணித்தேன்—பின்னரிவ்வூர்

நேயத்தானீங்காம னீங்கிக்குணதிசைக்கட்
கோயம்பதியிற் குடிபுகுந்தே—னோயாமே (௫எ௪)

யன்றுதொட்டுமோர்கழியி லாதிரையுமீனமதி
யொன்றுந்திருநாளா முத்திரத்து—நன்றுசெறி (௫எ௫)

நாட்களிலுஞ்சென்றுசென்று நாயகனார்நாயகியார்
தாட்களிலேநாயேன் சரண்புகுந்தேன்—வேட்கையினாற் (௫எ௬)

சின்னாளினாயைச் சிவிகைமிசையேற்றலென்ன
வென்னாலறியா வியல்பளித்தா—னொன்னார்போன் (௫எ௭)

மாறாயெதிர்த்தபல மாற்றலரைமாற்றிமகப்
பேறாதிபேறும் பெறுவித்தான்—வீறாக (௫எ௮)

வெண்ணியவெண்ணங்க ளெல்லாமெனக்களித்தான்
மண்ணிலுள்ளோரென்னை மதிக்கவே—பண்ணாந் (௫எ௯)

திருப்பணியுங்கொண்டருளிச் செந்தமிழ்ப்பாப்பாடும்
விருப்பருளியாண்டுகொண்டான் மேனாட்—டிருக்கனைத்து ()

நீக்கிவலியவந்து நேர்நின்றொருமனித
னாக்கியருளும்பழய வாசிரியன்—வாக்கியத்து (௫அ௧)

ளண்ணல்குருவாய்த்தம் மருமைத்திருவுருவங்
கண்ணெதிரேகாட்டிக் கருணையொடு—நண்ணுமெனு (௫அ௨)

மொன்றொழியவெல்லா முறப்பெற்றேனவ்வொன்று
மென்றெய் துங்கொல்லோவென் றெண்ணினே—னன்றொருநா()

ளென்கனவினூடே யெழுந்தருளித்தன்கோல
முன்கோலமாய்வந்து முன்னின்று—நின்சரித (௫௮௪)

மெல்லாமமைய வியற்றமிழாற்றதொன்று
சொல்லாய்நீசொல்லுமந்தத் தூதேசென்—றெல்லாந் (௫௮௫)

தருமென்றானெம்பெருமான் சற்குருவாயுன்முன்
வருமென்றான்சொல்லி மறைந்தான்—குருவாய் (௫௮௬)

நனவகத்துவந்தவந்த நாளினைப்போலேயென்
கனவகத்துங்காட்டிக் கரந்தா—னினைவெய்தி (௫௮௭)

யேதொன்றுங்கல்லா வெனைப்பார்த்துக்கற்றவர்சொல்
தூதொன்றுசொல்லென்று சொல்லியதாற்—றீதொன்று (௫௮௮)

தன்மையேன்சொல்லத் தரமில்லேனாயினுமென்
மென்மையேநோக்கி மெலியாமல்—வன்மையுள்ள (௫௮௯)

போதகன்சொல்லாகும் புணைதுணையாக்கொண்டுதுணிந்
தோதவொருவா றொருப்பட்டேன்—யாதினையாந் (௫௯0)

தூதுசெலமுன்னிலையாய்ச் சொல்லுவதென்றெண்ணிமனம்
வாதுசெயவுள்ளே மதித்துணரும்—போதுதனிற் (௫௯௧)

றாயார்கரத்திடைநீ தங்கியெனைப்பார்த்தொருநா
ணீயாரென்றோத னினைவுவர—வாயார (௫௯௨)

வென்சரிதநின்பா லெடுத்துரைத்தறக்கதென்று
முன்சரிதமெல்லா மொழிந்தனன்காண்—வன்சரித (௫௯௩)

முள்ளேனுனுனு முற்றதுரைத்தேனதனு
வெள்ளேலென்மீதி லிரங்குவாய்—தள்ளுகிலா (ருகூச)

யன்பிலாரெல்லாந் தமக்குரியரன்புடையா
ரென்புமுரியர் பிறர்க்கென்று—முன்புகன்ற (ருகூரு)

பொய்யாமொழியுணர்ந்த புந்தியாயெற்குதவி
செய்யாதொழித திறமன்றே—மெய்யாயென் (ருகூசு)

னம்மையுடனப்ப னருளுஞ்சமயங்க
டம்மையுணர்வாய்நீதா னன்றே—வம்மையப்பர் (ருகூஎ)

மேவுமிடஞ்சேறல் விண்ணோரின்மண்ணோரில்
யாவருக்குமொண்ணுதே யாயிடினுங்—தேவியார் (ருகூஅ)

கையூடிருத்தலினுற் காதுடுதோதற்
கையமலேசிற்கெளிதே யாகுங்காண்—பையவே (ருகூகூ)

யெவ்வாறென்செய்தி யியம்பினுலேற்றிடுமோ
வவ்வாறெல்லாநீ யறிந்தோதி—யெவ்வமுறும் (சுOO)

மாலவற்கு மிந்திரற்கும் வனவர்க்குந்தானவர்க்கு
மலவர்க்குநீயருளா விட்டாலுஞ்—சால (சுOக)

வெளியா யெங்குள்ளா ரெனத்தேடியாள்த
லளியாருநிற்கே யணியாய்—மொழிதலா (சுOஉ)

லன்னவனையாள்த லழகாமஃதன்றி
யின்னமொருவாற்ரு லிசைவாகு—மன்னவன்ருன் (சுOரு)

புன்மதத்திலாழ்ந்தலேந்து புந்திவரப்பெற்றுப்பின்
னின்மதத்தையாதரித்து நின்றமையாற்—ருென்மை (சுOச)

முருகாருநின்சமய முற்றத்துறந்து
திருகார்சமணமதஞ் சேர்ந்தங்—கருகான (௬௦௫)

சொற்கோவையாண்ட தொடர்பானுங்காத்தாள
னிற்கேகடனென்று நேர்ந்துணர்த்திச்—சற்குருவா (௬௦௬)

யின்னமொருகா லெழுந்தருளியென்முன்வரச்
சொன்னீபசுங்கிள்ளாய் தூது.

திருச்சிற்றம்பலம்.

—o—

# திருப்பேரூர்க் கிள்ளைவிடு தூது

முற்றுப்பெற்றது.